VISIT…

கண்ணே கண்மணியே!

1

''அடுத்தது 'சுவாதி கேபிள்ஸ்' கம்பெனிக்குரிய பதில் சார். நம்முடைய ரேட்டைக் குறிப்பிட்டு இருக்கிறோம்'' என்று கடைசிக் கடிதத்தை மானேஜர் வினோதனுடைய கையெழுத்துக்காக நகர்த்தினாள் மதுரா.

மேலெழுந்தவாரியாக பார்வையிட்ட பின்னர் அவன் கையெழுத்திட. அத்தனை கடிதங்களையும் எடுத்துக் கொண்டு கிளம்பலானாள்.

''வேலை நிறைய இருக்கிறதா?'' என்று வினோதனின் குரல் அவளை நிறுத்தியது.

''இல்லை ஸார். இதையெல்லாம் உறையில் இட்டு ஒட்டவேண்டும். அவ்வளவுதான். முகவரி கூட டைப் செய்தாயிற்று.''

''பத்து நிமிடங்களில் கிளம்பி விடுவாய்...?''என்று கைகளை உயர்த்தி சோம்பல் முறித்தான் அவன்.

''ஆமாம்.''என்று கடிதங்களுடன் நகர்ந்தாள் மதுரா

வினோதனின் பார்வை தன்மீது படிந்திருப்பதை உணர்ந்தும் உணராதவள் போன்று ஓர் சீரான வேகத்துடன் அறையை விட்டு வெளியேறினாள்.

கடிதங்களை மடித்து, உரிய உறைகளில் இட்டு ஒட்டு கையில் மனது யோசித்தது.

வினோதன் பார்வைக்கு நன்றாகத்தான்—மிகவும் நன்றாகவே தான் இருந்தான்.

குணமும் நல்லதுதான்.

படிப்போடு நல்ல பதவியும் இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக அவளை விரும்புகிறவனும் கூட.

தம்பியைப் பார்த்துக் கொள்வான்; தாயாரின் பொறுப்பையும் கூட ஏற்றுக் கொள்வான்.

இவனை மறுப்பது மதியீனம் தான்.

ஆனால்...

'ஆனால்' தான்.

இந்த ஆனால் ஒரு கேள்வியும் இல்லை; இதற்கு விடை மட்டுமின்றி, முடிவும் இல்லை.

வினோதனின் மனம் நோகாத படி அவனது அழைப்பை மறுத்து விட்டு, காத்து நின்று பஸ் ஏறி வீடு வந்து சேர்ந்தபோது மதுரா மிகவும் களைத்துப்போயிருந்தாள்.

உடலைக் காட்டிலும் மனது மிகவும் ஓய்ந்து போயிருந்தது.

வினோதனோடு இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் எத்தனை நாள் ஆடுவது?

அவனை ஒப்புவதோ முடியாத காரியம்.

வெளிப்படையாக அவன் கேட்டு இவள் மறுக்க நேர்ந்து விட்டால் பிறகு அங்கே தொடர்ந்து பணிபுரிவது எப்படி சாத்தியம்?

வேலையை விட்டு விலகினாலோ வேறு வேலை கிடைப்பது—அதுவும் இந்தப் போட்டிக்குள் கிடைப்பது எளிதல்லவே.

வேலையில்லாமல்—அதன்மூலம் வரும் பணம் இல்லாமல் இந்த வீட்டில் ஒரு நாள் வாழமுடியுமா?

எண்ணி எண்ணி ஓய்ந்து போயிருந்த மனதை மேலும் உளைப்பதற்கென்று வீட்டிலும் பிரச்சினைகள் காத்திருந்தன.

வாயிலில் நின்றபடி தெரு முனைவரை ஒருதரம் எட்டிப்பார்த்து விட்டுத், ''தம்பி இன்னமும் வரவில்லையம்மா'' என்று கவலையுடன் உரைத்து விட்டு உள்ளே சென்றார் தன் கட்டிலில் சாய்ந்தார் புவனேஸ்வரி.

எவனாவது நண்பனோடு அரட்டை அடித்துக் கொண்டிருப்பான் என்று எண்ணியபடி உள்ளே சென்றாள் மதுரா.

உடம்புகழுவி, உடைமாற்றி, காபி அருந்தி, இரவுச் சமையலில் உதவி, எல்லாம் முடிந்த பிறகும் தம்பி வரவில்லை.

வெகுநேரம் ஆகிவிட்டதே என்று கவலையுடன் கேட்டில் வந்து எட்டிப் பார்த்தபோது உள்ளே வந்தவர் மாமா சிதம்பரம்தான்.

அவளைக் கண்டதும் ஒரு கணம் தயங்கி எதையோ சொல்ல வாயெடுத்தார்.

ஆனால்''ஊர்சுற்றிக் கழுதைகளுக்கெல்லாம் கொட்டி அளக்க வேண்டும் என்று என் தலையெழுத்து'' என்று

உரக்கவே தெளிவாக முணுமுணுத்தபடி முன்புறம் வந்த மனைவியைப் பார்த்ததும் வாயை மூடிக்கொண்டு கேட்டைச் சாத்தினார்.

''மச மசவென்று நில்லாமல் உள்ளே வந்து வயிற்றுப் பாட்டை முடியுங்கள்'' என்று கணவனை அதட்டிவிட்டு உள்ளே சென்றாள் பெருந்தேவி.

மனைவி கண்ணைவிட்டு மறையும் வரையில் பார்த்திருந்துவிட்டு, மருமகளிடம் திரும்பினார் சிதம்பரம்.

''சின்னக்குட்டி!'' என்று மெதுவான குரலில் அழைத்தார்.

''தம்பிக்காகக் காத்திருக்க வேண்டாம். சாப்பிட வா.'' என்றார் கிசுகிசுப்பாக.

மாமனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தாள் மதுரா.

சிதம்பரத்தின் பார்வை எங்கோ விலகி ஓடவும் சந்தேகம் பலத்துவிட, ''தம்பி எங்கே போயிருக்கிறான், மாமா?'' என்று வினவினாள்.

''அ...அது எனக்குத் தெதெரியாதே.'' என்று அவர் அவசரமாக மறுத்தார்.

முகம் இறுகிப் போயிற்று அவளுக்கு.

இந்த மனிதர்களும் ஒரு காப்பு என்று இவர்களுடைய ஆதரவில் வாழவந்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

இந்தப் பிழையில் தன் பங்கை எண்ணிப் பார்த்த வளின் முகம் கன்றியது,

''வேலைக்குத் தோதாப் படித்திருக்காளாமே. அங்கே ஏதாவது ஆபீசில் ஒரு வேலை பார்த்துக் கொடுத்தால் நல்லா சம்பாதித்துப் போடுவாள். உங்க தரகு வேலைப்

பணம், வைத்தா குடுமி சிரைத்தா மொட்டை என்கிற கதைதானே. இவள் சம்பளம் மாதாமாதம் ஒழுங்காக வருமே. இந்த வீட்டு வாடகை வேறே வரும். கல்யாணம் பேசுகிறோம், பேசுகிறோம் என்று தள்ளிக்கொண்டே போனால் யாருக்குத் தெரியப் போகுது? எப்படியும் ஆறேழு வருஷத்துக்காவது அவள் பணம் பிரயோசனப் படுமே.'' என்று அத்தை மாமாவிடம் உரைத்தது காதில் விழவும் 'ஆகா' என்றல்லவோ ஒடிவந்து விட்டாள்.

கட்டியவன் இழப்பில் ஓய்ந்து நின்ற தாயார் அவளுடைய பேச்சுக்கு மாறு சொல்லியிருக்க மாட்டார்தான்.

அந்த நிலையில், 'அப்பா இல்லாவிட்டால் என்ன? அம்மாவுக்கு நாங்களும் எங்களுக்கு அம்மாவும் துணை'' என்று அடித்துச் சொல்லியிருக்கலாமே.

ஆனால் கல்யாணம் கல்யாணம் என்று அம்மா துளைக்கக் கூடுமே; இப்படித் தட்டிவிட ஆள் இருந்தால் நிம்மதியாகப் போகுமே என்று எண்ணியது அவளைப் பொறுத்தவரையில் சரியாகத்தான் இருந்தது.

சென்னை வந்து இந்த நான்கு ஆண்டுகளும் அந்த வகையில் நிம்மதியாகத்தான் கழிந்தன.

அவ்வப்போது பல மாதங்களுக்கு ஒருதரம், ''நம் மதுக் குட்டிக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்தேன்...'' என்று தொடங்கி ஒரு சின்ன ஆர்ப்பாட்டம் செய்வார் சிதம்பரம்.

சில நாட்கள் சென்றபின், ''அய்யோ, அய்யோ இரண்டு லட்ச ரூபாய்க்கு நகையும் தொகையுமாகக் கேட்கிறார்களே, படுபாவிகள்'' என்று முடிப்பார்.

''அல்லது, ''மாமியார்க்காரி படு ராட்சசியாம் அக்கா. நம் பெண்ணைக் கட்டிக் கொடுத்தால் சாணம் தெளிப்பதிலிருந்து நம் பெண்தான் செய்யவேண்டும்

என்று இப்போதே 'கண்டிஷன்' போடுகிறாள். 'போடி?' என்று விட்டேன்" என்று அளப்பார்.

முகவாயில் கைவைத்து, 'கலிமுற்றிப் போயிற்று' என்று கண்ணை விரிப்பாள் பெருந்தேவி.

உள்ளூர ஓர் ஏளன நகையுடன், 'கலிமுற்றித்தான் போயிற்று" என்று தனக்குள்ளேயே கூறிக் கொண்டு அமைதி அடைவாள் மதுரா.

"ம்...என்னவோ, அவளுக்கென்று உரியவன் இனி மேலா பிறக்கப் போகிறான். வருவான்" என்று முணு முணுத்துவிட்டுத் தன் கட்டிலில் ஒடுங்கிப் போவார் புவனேசுவரி.

எப்படியோ, அவள் எண்ணி வந்தது போலவே. காலம் நிம்மதியாக — அவளது அடிமனதில் பூட்டி வைத்திருந்த அந்த ஒரு வேதனை தளர நிம்மதியாகவே கழியலாயிற்று.

அவள் வேண்டியிருந்ததும் அதுதானே.

ஆனால் தன் நிம்மதியைப் பற்றி எண்ணி வந்தவள் தம்பியைப் பற்றியும் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும் இல்லையா?

அவனுடைய பிற்காலம் பற்றி லெகுவாகச் சிந்தித் திருக்க வேண்டும் அல்லவா?

அவனைப் பற்றிச் சற்றும் எண்ணிப்பாராமல் ஓடி வந்தது பெருத்த சுயநலமில்லையா?

அதன் விலையை இப்போது கொடுக்கும்படியாய் ஆகிறதோ?

தம்பியைப் பற்றி நினைக்கையில் உள்ளூர சிறு எரிச்சல் மன்றாடுவதை உணர்ந்தாள் மதுரா.

தான் ஓர் ஆண்பிள்ளை என்பதை இவன் எப்போது உணரப் போகிறான்?

நெஞ்சில் உறுதியோ திடமோ இல்லாமல் சதாசஞ்சல மும் மாறுமனமுமாக இருந்தால் இவன் எப்போது வளர்வது.

இவன் நிழலில் தாயாரை எப்போது காப்பது?

தாயாரைக் காப்பதுகூட அவசியமில்லை. அதைக் கால முழுமையும் மதுராவே செய்து கொள்ள முடியும்; செய்வதாகத்தான் அவளது உறுதியும்கூட.

ஆனால் தன்னைத்தானே பார்த்துக் கொள்ள வேண்டாமா?

அதுகூட இல்லையென்றால் பிற்பாடு கணவன் தகப்பன் என்ற பொறுப்புகளை எப்படி வகிப்பான்?

தன்வரையில் உண்டு முடித்து ஏப்பமிட்டபடி வந்த தாய்மாமனிடம் சென்றாள்.

"தம்பி எங்கே மாமா!" என்று மீண்டும் வினவினாள்.

"நீ ஏன் என்னிடமே கேட்கிறாய்? அவன் வயதுப் பையன், எவனாவது சினேகிதனோடு படம் பார்த்து விட்டு இராத் தங்கிவிட்டு வருவான். ஆவ்...வ்...அப்பாடி, என்னமாய்த் தூக்கம் வருகிறது!" என்று மீண்டும் உள்ளே திரும்பினார் சிதம்பரம்.

"மாமா!" என்று அதட்டினாள் மதுரா.

கண்டிப்பான பாவனையுடன், "மனோகரன் எங்கே என்று சொல்கிறீர்களா, அல்லது அவனுக்கு சிகரெட் டுக்கு நீங்கள் பணம் கொடுத்ததை அத்தையிடம் சொல்லி விட்டும்மா!" என்று தணிவான குரலில் மிரட்டினாள்.

''ஐ...சும்மா மிரட்டுகிறாய். அதெல்லாம் போய் அத்தையிடம் சொல்வாயா, என்ன? என் சின்னக்குட்டி, நீ நல்ல பெண்ணாயிற்றே" என்று அவளுடைய தந்தையின் செல்லப் பெயரைத் தானும் சூட்டித் தாஜா செய்து பார்த்தார் சிதம்பரம்.

அவள் அசையாமல் நின்றாள்.

''ம்...'' என்று சற்று யோசித்தார்.

பிறகு, ''ம்ம்...எதற்கும் உனக்கும் தெரிந்திருப்பது நல்லதுதான். பின்னாலே...''

அடிவயிற்றில் புளி கரைய, ''எது?'' என்று வினவினாள் மதுரா.

''அதுதான். நம்ம ராஜாப் பயல் ரேசுக்குப் போவது?'' என்றார் அவர், குரலில் அலட்சியத்தைக் காட்டி.

''மாமா!'' என்று அதிர்ந்தாள் மதுரா.

''ஷ்...மெல்லப் பேசு. இல்லாவிட்டால் உன் அத்தை வந்து நிற்பாள். ஆனால், அதென்ன ரேசுக்குப் போவது பெரிய பாவம் என்பதுபோல அப்படிக் கத்துகிறாய்? அதென்ன பஞ்சமாபாதகங்களில் ஒன்றா? பொய்யைப் பாதகம் என்ற வள்ளுவர் கூடக் குதிரை ரேசை அப்படிச் சொல்லவில்லையே" என்று வாதிக்கலானார் மாமன்.

அவள் முகம் வெளுத்துப் பின் சினச் சிவப்பில் கனல்வதைக் கண்டதும் சற்று பயந்து, ''குதிரைப் பந்தயம் ஒன்றும் பெரிய தப்பு இல்லையம்மா. ஒரு ஜாக்பாட் அடித்தால் எல்லாக் கடனும் தீர்ந்துவிடும்". என்றார் சமாதானமாக.

''கடன்!? அது வேறா?'' என்றாள் மதுரா ஆத்திரத்துடன்,

''அதெல்லாம் ஒன்றுமில்லை. ஒன்றுமே இல்லை. ஒரு ஜாக்பாட் அடித்தால் பூபூ என்று ஊதி விடலாம். மதுக் குட்டி'' என்று நம்பிக்கையாகப் பேசினார் சிதம்பரம்.

''எவ்வளவு?'' என்றாள அவள் சுருக்கமாக.

''அது...அதிகம் இல்லை... அதிகமில்லை... வந்து...'' ஏனடா இவளிடம் வாயைக் கொடுத்தோம் என்பது போலத் தலையைச் சொறிந்தபடி நழுவ முயன்றார் தாய் மாமன்.

''நில்லுங்கள், மாமா.'' என்று அதட்டினாள் மதுரா. ''நீங்கள் இப்போது சொல்லாவிட்டால்...'' மேலே என்ன வென்று கூறாது உட்புறம் சுண்ணைக் காட்டி மிரட்டினாள்.

உள்ளிருந்து அரவமும் கேட்கவே சிதம்பரம் அரண்டு போனார்.

''அத்தை வருகிறாளம்மா. இப்போது விட்டுவிடு. நாளைக்கு முழுவதும் சொல்லிவிடுகிறேன்''. என்று கெஞ்சிக் கேட்டார்.

இப்போதைக்கு மேலே மிரட்டினாலும் அத்தை வருமுன் முழுவதும் கேட்க இயலாது.

அத்தையின் முன்னிலையில் கேட்க மதுராவுக்கும் பிரியமில்லை.

எனவே சிதம்பரத்தைப் பார்த்து, ''நாளைக் காலையில் பல் துலக்குமுன் சொல்லியாக வேண்டும். இல்லாவிட்டால் ஜாக்கிரதை மாமா''. என்ற எச்சரிக்கையோடு உள்ளே போனாள்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து சிதம்பரம் நழுவி ஓடுமுன் பிடித்து, அதட்டி உருட்டி அவரிடமிருந்து விவரம் அறிந்தபோதோ அடிவயிற்றில் நெருப்பு மூண்டது.

2

கிட்டத்தட்ட ஆறுமாதங்களாக அவள் தம்பி மனோகரன் குதிரைதாசன் ஆகியிருக்கிறான்.

விடாமல் குதிரை வாலில் பணம் கட்டிப் பறக்க விட்டிருக்கிறான்.

அப்படி அவன் பறக்கவிட்ட பணம் கிட்டத்தட்ட முப்பதாயிரம் ரூபாய்!

காற்றோடு விட்ட அத்தனை பணமும் கடன் வாங்கியதே.

''ஆனால்...ஆனால் யார் மாமா இவனை நம்பி முப்பதினாயிரம் ரூபாய் கடன் கொடுப்பார்கள்? இதென்ன பைத்தியக்காரத்தனம்?'' என்றாள் மதுரா நம்ப முடியாமல்.

''கொடுத்திருக்கிறானே, கொடுத்திருக்கிறானே! இவனும் கையெழுத்துப் போட்டு வாங்கியிருக்கிறானே!'' என்று தலையை உருட்டிச் சொன்னார் சிதம்பரம்.

என்னவோ பெரிய சாதனைபோல அவர் சொன்ன விதம் மதுராவுக்கு எரிச்சலைக் கிளப்பியது.

''அதெப்படிச் செல்லும்? இவன் சின்னப் பையன். இவனிடம் கையெழுத்து வாங்கினால் அது எப்படிச் செல்லுபடியாகும்?'' என்றாள் ஆத்திரத்துடன்.

''சின்னக்குட்டி, இந்தஜனவரியில் அவனுக்கு இருபத்தி ஒன்று முடிந்துவிட்டதை மறந்துவிட்டாயா? உனக்கு இருபத்தி மூன்று...''

இருபத்தி மூன்று!

நான்கு ஆண்டுகாலம் முடிந்திருக்கிறது.

கடவுளே!

கடைசி வார்த்தையை அவள் வாய்விட்டே முனகிவிட, ''ஆமாம்மா. கடவுள்தான் அந்த பையனைக் காப்பாற்ற வேண்டும். அவரும் கைவிட்டால் ஜெயில்தான்.'' என்று உதட்டைப் பிதுக்கினார் சிதம்பரம்.

எங்கேயோ சென்ற அவளது நினைவு அதிர்ந்துபோய் மீண்டும் டைப்பில் இருந்த பிரச்சினைக்கு வந்துசேர்ந்தது.

''ஜெயிலா!'' என்றாள் அரண்டுபோய்.

''ஆமாம்மா. கடன் கொடுத்தவன் வக்கீல் நோட்டீசு விட்டிருக்கிறான்? இந்த வாரக் கடைசிக்குள் பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் கோர்ட் நடவடிக்கை எடுத்து ஜெயிலில் போடப்போகிறேன் என்று.''

''ஆனால்...கடன் பணத்தைக் கட்டமுடியாவிட்டால் கூடச் சிறையில் போடுவார்களா, மாமா?'' என்று திகைத்துப் போனாள் மதுரா.

''போடுவார்களாமே. அதைத்தானே நேற்றுப் போய்க் கேட்டிருக்கிறான். கேட்டுவிட்டு வந்து என்னைப் பார்த்தான். வீட்டுக்கு வரமாட்டேன் என்று ஒரே அழுகை. சரிதான் என்று பத்து ரூபாய் கொடுத்து ஒரு ரூமில் தங்க வைத்துவிட்டு வந்தேன். சீக்கிரம் கிளம்பி வந்தாயானால் இரண்டு பேரும் போய்ப் பார்க்கலாம்.''

பெயருக்கு ஓர் அலுவலகத்தில் முன்னூறு ரூபாய் வேலை ஒன்று பார்த்தபோதும் சிதம்பரத்தின் முக்கியத் தொழில் தரகுதான்.

மாட்டிலிருந்து மாளிகை வரைத் தரகு வேலைதான்.

இந்தத் தரகு மாமாவை எவ்வளவுக்கு நம்பலாம்?

''அரைமணி நேரத்தில் கிளம்பி விடுகிறேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

''தம்பி வந்தானாம்மா?'' என்று தாயாரின் பலவீன மான குரல் நெஞ்சடைக்கச் செய்தது.

தந்தையின் மறைவுக்குப் பின் தாயார் எப்படி ஒடுங்கி விட்டார்!

அவ்வப்போது மதுராவின் திருமணப் பேச்சு எழும் போதுமட்டும் அந்தக் கண்களில் உயிர் தெரியும்.

மற்றபடி...ஏதோ, தன்னாலான சிறு வேலைகளைச் செய்துவிட்டு கட்டிலோடு கட்டிலாய் அடங்கிவிடுவார்.

தம்பியின் நிலைதெரிந்தால் என்ன ஆவார்!

முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு ''தம்பி ஒரு சிலேகிதன் வீட்டில் இருக்கிறானாம்! இன்று வருகின்றானாம். எனக்கு ஆபீசில் நிறைய வேலை இருப் பதால் கொஞ்சம் சீக்கிரமாகக் கிளம்புகிறேன் அம்மா.'' என்று உரைத்து சமாளித்தாள் மதுரா.

ஒரு பப்ளிக் பூத்திலிருந்து அலுவலகத்துக்கு டெலி ஃபோன் செய்து விடுப்பு பெற்றுக் கொண்டு தம்பியிடம் சென்றாள்.

அழைப்புக் கிணங்கி கதவைத் திறந்த உடன்பிறந் தானைக் காணவும் பகீரென்றது அவளுக்கு.

ஒரு நாளில் அரை ஆளாகிப் போனானே.

அவள் ஏதும் பேசுமுன்பாக, ''நீங்கள் இரண்டுபேரும் பேசிக் கொண்டிருங்கள். எனக்கு ஒரு வசூல் பண்ண வேண்டும்.'' என்று ஓடிவிட்டார் சிதம்பரம்.

இந்த இக்கட்டில் அவருக்கும் பங்கு இருப்பது நன்றாகவே புரிந்தது மதுராவுக்கு.

ஆனால் அவரைப் பிடித்து நிறுத்திக் கொக்கிக் கேள்வி போட்டுத் திணற அடிப்பதில் லாபம் என்ன?

நடந்தது எதுவும் இல்லையென்று ஆகுமா?

அதைக் காட்டிலும் தம்பியைக் கவனிப்பது முக்கிய மென்று நினைத்தாள் அவள்.

தமக்கையைக் கண்டதும் மீண்டும் விசும்பத் தொடங்கியிருந்தான் மனோகரன்.

முகத்தை மூடியிருந்த விரல்களின் ஊடே வழிந்த கண்ணீரைக் கண்டதும் மதுராவின் நெஞ்சு வலித்தது.

கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்தாள்.

தம்பியின் கைகளை முகத்திலிருந்து பிரித்தெடுத்து, ''ஷ். சின்னப்பிள்ளை மாதிரி இது என்ன அழுகை, மனோ? முதலில் அதை நிறுத்திவிட்டு, விஷயம் என்ன வென்று சொல்லு. மேலே என்ன செய்யலாம் என்று பார்க்கலாம்!'' என்றாள் கனிவாக.

தம்பியின் அழுகை நில்லாததைக் கண்டதும், ''ச்சு. முதலில் அழுகையை நிறுத்து என்றேனே,'' என்றாள் அதட்டலாக.

''ஒன்றும் செய்ய வழியில்லை.'' என்றான் அவன் அழுகைக் குரலிலேயே.

தம்பியின் கைகளை விட்டுவிட்டு, அறையின்மூலையில் இருந்த தண்ணீர்ப் பானையிலிருந்து ஒரு தம்ளர் நீர் மொண்டுவந்தாள் மதுரா.

''முதலில் இதைக் குடி. பிறகு முகத்தைக் கழுவிவிட்டு வா...எழுந்திரு மனோ.'' என்றாள் கண்டிப்பான குரலில்.

அவன் வெளியே சென்று முகம் கழுவிவிட்டு வருமுன், அந்த அறையில் ஒரு புறமாய் இருந்த நாடாக் கட்டிலின் மீது கிடந்த அழுக்குப் போர்வையை ஒருபுறமாய் ஒதுக்கி விட்டு அமர்ந்தாள்.

கையோடு கொண்டு வந்திருந்த உணவைத் தம்பியிடம் கொடுத்து உண்ணவைத்தாள்.

அவன் உண்டு முடித்தபிறகு, ''இப்போது சொல்லு,'' என்று விசாரிக்கத் தொடங்கினாள்.

மதுரா ஊகித்தது போலவே சிதம்பரம்தான் குதிரைப் பந்தயத்திற்கு மனோகரனை அழைத்துச் சென்று பழக்கி விட்டிருக்கிறார்.

எப்படியோ, முதல் தடவையே ஓர் இருநூறு ரூபாய் அடிக்கவும் பந்தயப் பைத்தியம் மனோகரனை வசமாகப் பற்றிக் கொண்டது,

ஏதோ கணக்கு எழுதித் தந்ததால் நண்பனுடைய தந்தை பணம் கொடுத்ததாகச் சொல்லி அதில் தாயாருக்கும் தனக்குமாகத் தம்பி வாங்கி வந்த சேலைகள் நினைவு வந்தது மதுராவுக்கு.

இந்தப் பணம் தான் என்பது புரிபட, ஒரு புறம் கோபம் வந்தாலும மறுபுறம் உருகியும்போனாள்.

இரண்டையும் வெளிக்காட்டாமல் மறைத்து ''ஆனாலும் முப்பதாயிரம் என்றால் எவ்வளவு பெரிய தொகை? இவ்வளவு தோற்றது தெரியவில்லையா? கொஞ்சம் கூடவா மனம் உறுத்தவில்லை?'' என்று கேட்டாள்.

''கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக் கொண்டே இருந்ததால் தெரியவில்லை அக்கா. அதோடு...அதோடு மாமாவுக்காகத்தான்...அதாவது மாமாவோடு சேர்ந்து தானே செய்கிறோம்; வேண்டியதை மாமா பார்த்துச் செய்வார் என்று நினைத்தேன்...ஒரோரு தடவை நானே நினைத்தேன் அக்கா. 'ஜயிக்கவே காணோமே மாமா கடன் ஏறுகிறதே' என்று நான் கவலைப்பட்டபோதுகூட' எல்லாம் நம்மாள்தானே. நாம் ஜயிக்கிறபோது கொடுத்தால் போதும்' என்று மாமா சொல்லிவிட்டார்.

மாமா...மாமா...மாமா!

ஏக்கத்துடன் தமக்கையின் முகத்தைப் பார்த்தவன் அது இறுகிப் போயிருப்பதைக் காணவும் மீண்டும் கலவரமுற்று அழலானான்.

அவனுக்குச் சற்றும் குறையாதபடி தானும் கலவரமுற்றிருந்த மதுராவுக்குத் தம்பி அழுவதைச் சகிக்கமுடியவில்லை.

மெல்ல அவன் தலையை வருடிவிட்டாள்.

''சும்மா சும்மா அழக்கூடாதுப்பா, இப்போது வந்திருக்கும் கஷ்டம் இந்த அழுகையால் நிவர்த்தி ஆகிவிடும் என்றால் சொல்லு; உன்னுடன் சேர்ந்து நானும் அழுகிறேன். உரக்க வேண்டுமானாலும் அழுகிறேன். செய்யட்டுமா!'' என்று மிருதுவான குரலிலேயே கேட்டாள்.

திகைப்புடன் நிமிர்ந்து அக்கா முகத்தைப் பார்த்தான் மனோகரன்.

லேசாக முறுவல் செய்து, ''பார், அழுது துன்பம் தீர்வது என்பது இல்லை; புரிகிறதல்லவா? பிறகு ஊஞ்ஞ ஊஞ்ஞ என்று என்ன அழுகை? 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று வள்ளுவர் சொல்லியிருப்பது ஏன் தெரிகிறதா? யாராலேயும் கஷ்டம் வரும் போது சிரிக்க முடியாது என்பது அவ்வளவு பெரிய அறிவாளிக்குத் தெரியாதா? ஆனால் எல்லாம் போயிற்று என்று தோல்வி மனப்பான்மையோடு அழுது உள்ள வழிகளையும் மூடிவிடக் கூடாது; சோர்வை உதறி நிதானமாய்ச் சிந்தித்து நல்ல வழி தேடிச் செயல்படவேண்டும் என்பதுதான் அவருடைய பாடலுக்கு அர்த்தம்''. என்றாள் மதுரா.

"ஒரு வழியும் இல்லையக்கா". என்றான் அவன் வருத்தமாகவே.

"அதை நானல்லவா சொல்லவேண்டும்" என்றாள் அவள். "முதலில் விஷயத்தை முழுவதாக நீ சொல்லு. கையெழுத்துப் போட்டுக் கடன் வாங்கியதாகச் சொன்னாய் சரி. அதைத் திருப்பித் தருவது பற்றியும் எழுதியிருப்பாய் இல்லையா?" என்று விசாரிக்கத் தொடங்கினாள்.

"ஒரு மாதத்திற்குள் திருப்பித் தருவதாக...அதில்... எழுதி இருக்கிறது". என்றவனுடைய குரல் கிணற்றுக் குள்ளேயே போய்விட்டது.

தலை தூக்கிய சினத்துடன், "அதுதான் எப்படி என்கிறேன். ஒரே மாதத்தில் மூப்பதாயிரம் ரூபாயை எப்படிச் சம்பாதிப்பாய்? நீ ஒன்றும் பெரிய தொழில் அதிபர் இல்லையே, உற்பத்திப் பொருளை விற்றுக் கொடுக்கிறேன் என்று கூற. அறுவடைத் தானியத்தை விற்றுக் கொடுத்து விடலாம் என்று சொல்ல நீ நிலச் சுவான்தாரும் இல்லை. வேறே எந்த...ஒகோகோ...கிண்டியில் குதிரை வாலில் கட்டியிருப்பதை அவிழ்த்துத் தருவதாகச் சொன்னாயாக்கும்!" என்று கோபத்தில் தொடங்கி ஏளனத்தில் முடித்தாள் மதுரா.

தம்பி பேச்சிழந்து தலைகுனியவும், "நீதான் பந்தய மோகத்தில் சொன்னாய் என்றாலும் அதை ஒப்புக் கொண்டு பணத்தைத் தூக்கித் தர அந்த ஆள் என்ன மடையனா? ஜயிக்காவிட்டால் எப்படித் தருவது என்று யாராவது யோசித்திருக்க வேண்டாமா?" என்று பொரிந்து கொட்டினாள்.

"மாமா..." என்று தொடங்கியவன் சகோதரியின் சிவந்த முகத்தைப் பார்த்துப் பேச்சை நிறுத்தினான்.

"சொல்லு, சொல்லு, சொல்லி முடி. ஒன்றையும் மறைக்காமல் குறைக்காமல் அத்தனையும் கொட்டித் தீர்த்துவிடு" என்று விரட்டினாள் மதுரா.

"இந்த 'ஒரு மாதக் கெடு' எல்லாம் சும்மா ஒரு பேச்சுக்காகத்தான். நாம் எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று மாமா சொன்னார்" என்றான் அவன் குரல் கம்ம.

"அதற்காக? தம்பீ, நான் ஆத்திரப்படுகிறேன் என்று நினைக்கிறாய் இல்லையா? இந்த மாதிரி ஒரு சிக்கலில் மாட்டிக் கொள்ளுமுன் — என்னை விடு — அம்மாவையேனும் நீ எண்ணிப் பார்த்திருக்கலாம் இல்லையா? இதெல்லாம் தெரிய வந்தால் அம்மா தாங்குவார்களா?" என்று கேட்டாள் மதுரா.

தம்பி பேந்த விழிப்பதைக் காணவும் மீண்டும் கோபத்தை அடக்கினாள்.

"சரி சரி. இனி அந்தக் கடன்காரன் காலில்தான் விழுந்தாகவேண்டும். அந்த ஆள் எப்படிப்பட்டவர். பார்த்தால் கொஞ்சம் இரக்கம், மனிதத் தன்மை ஏதும் தொகிறதா?" என்று வினவினாள்.

"நான் பார்த்ததில்லை அக்கா" என்று பதிலிறுத்தான் மனோகரன்.

"என்னது! பின்னே எப்படிப் பணம் வாங்கினாய்? எப்படி எழுதிக் கொடுத்தாய்?" என்றாள் அவள் வியப்பும் கோபமுமாக.

"மாமாதான் பணம் வாங்கிவருவார், அவரே தான் ஸ்டாம்புப் பேப்பரில் கையெழுத்தும் வாங்கிப் போனார்." என்று வெகுளித்தனமாய் விளக்கினான் தம்பி.

பொறுமையை இழுத்து பிடித்துக் கொண்டு, "தம்பி, நீ சின்னப் பையன் இல்லை. இருபத்தி ஒரு வயது முடிந்த

பிறகும் ஸ்டாம்புப் பேப்பரில் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பது என்ருல் அது எது வரையில் செல்லும் என்று கூடத் தெரியாதா?" என்று நொந்து கொண்டாள் மதுரா.

"ஒன்றும் பயம் இல்லை என்று மாமா சொன்னா ரக்கா." என்றன் இளையவன் பிள்ளை போல.

மேலும் பொறுக்க முடியாமல், "மாமா, மாமா, மாமா! இந்த மாமா எவ்வளவு மட்டரகம் என்று தெரியாதா?" என்று வெடித்து விட்டாள் தமக்கை.

மொழி அறியாதவன் போலப் பார்த்தான் மனோகரன்...

"பின்னே, நீ தானக்கா முன்னே சொன்னாய், மாமா நல்லவர், அவர் வீட்டில் போய் இருந்தால் நமக்கு நல்லது செய்வார்... என்றெல்லாம் சொன்னாயே?" என்றான் குழப்பத்துடன்.

குற்ற உணர்வுடன் தலை குனிந்தாள் மதுரா.

தன் வசதிக்காக ஓர் அறியாப் பையனின் வாழ்வை வீணடித்திருப்பது அவள்தானே.

இப்போது மீட்பதும் அவளுடைய பொறுப்பு தானோ!.

3

பொறுப்போ இல்லையோ, தன் தாயாருக்காக வேனும் தம்பியைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்று முடிவு செய்தாள் மதுரா.

சிலகணங்கள் தீவிரமாக யோசித்த பிறகு ஒரு முடிவுக்கு வந்தாள்.

"கவனி மனோ, என் அலுவலகத்தில் ஓர் இரண்டு அல்லது அதிகபட்சம் மூவாயிரம் ரூபாய் கடனாகக் கேட்டுப் பெறமுடியும். அப்படி இப்படி என்று அத்தையும் மாமாவுமாகச் சாப்பிட்டதுபோக மீதியிருக்கும் இந்தச் சங்கிலியையும் வளையலையும் விற்றால் ஓர் ஆறாயிரம் கிடைக்கக்கூடும். எட்டு அல்லது ஒன்பது ஆயிரம் ஆகிறதா? இதை முதலில் கொடுத்து விடலாம். பிறகு நீயும் ஒரு வேலை—அது தினக்கூலி வேலையென்றாலும் சரிதான் –தேடிக்கொண்டாக வேண்டும். இருவருக்குமாக வருவதைச் சாப்பாட்டுச் செலவு போகக்கடனுக்குக் கட்டி விடலாம். கடன் வாங்கிச் செலவு செய்தபிறகு அதை எப்படியும் கட்டி விடுவதுதான் நியாயம். இல்லையா?" என்று தன் முடிவைத் தம்பியிடம் கூறினாள்.

ஆனால் மனோகரன் முகம் வாடிப் போயிற்று. "உன்னிடம் இருப்பதே இந்த ஒரு ஜோடி வளையல்தான். இதையும் விற்றுவிட்டு எதைப்போடுவாய் அக்கா" என்றான் வருத்தமாக.

கோபமாக அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, "என் கையில் தங்க வளையல் போடுவதைவிட உன் கைக்கு இரும்புக் காப்பு ஏறாமல் காப்பதுதான் முக்கியம். மடத்தனமாக உளறாமல் உருப்படியாக ஏதாவதுசெய்யப் பார்" என்று கடிந்தாள் மதுரா.

மீண்டும் தலை குனிந்தான் தம்பி.

அவனுடைய வேதனையைக் கவனியாதவள் போல, ''சொல்வதைக் கவனமாகக் கேள் மனோ. கடனை நான் முன்பு சொன்னமாதிரியாகத் திருப்பித் தருவதாக அந்த ஆளிடம் மாமா மூலம்...இல்லை இல்லை. நீயும் மாமாவுடன் சென்று நேரிலேயே சொல்லு. திரும்பத் திரும்ப மாமா முகத்தைப்பாராமல் நீயே பேசவேண்டும். அதுவும் தைரியமாக அடித்துப் பேசவேண்டும். இந்த மாதிரிதான் திருப்ப முடியும் என்று அழுத்தத்துடன் சொல்லு'' என்று உரைத்தாள் அவள்.

''ஆனால்...ஆனால் அந்தக் கடன்காரர் ஒத்துக் கொள்ளாவிட்டால்...''

''முதலில் இந்த 'ஞனஞன' குரலை விட்டுக் கொஞ்சம் துணிச்சலுடனேயே பேசு, இப்படித்தான் தரமுடியும். இதற்கு ஒப்பவில்லையென்றால் உன்னால் ஆனதைப் பார் என்று சொல்லு. எப்படியும் தன் பணம் திரும்ப வேண்டும் என்பதில் அவனுக்கும் அக்கறை இருக்கும் இல்லையா? இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொள்வான் என்றே நினைக்கிறேன். மறுத்தால் உள்ள நிலைமையைச் சொல்லி வேறு என்ன செய்வது என்று அவரையே கேள். வார்த்தைக்கு வார்த்தை என்னையே எதிர்பாராமல் உன் மூளையையும் கொஞ்சம் பயன்படுத்தலாம், தம்பி'' என்று கோபமும் பரிகாசமுமாகப் பேசியவள் குரலைத் தணித்து, ''நீயும் மூளை அதிகம் உள்ளவன்தானே, மனோ? இல்லாமலா இதுவரை நல்ல நல்ல மார்க்கெல்லாம் வாங்கினாய்?'' என்று இதமாகக் கேட்டுப் புன்னகையும் செய்தாள்.

தன்னையும் மீறிப் பதிலுக்கு முறுவலித்தான் மனோகரன்.

அவளுடைய புன்முறுவலின் சக்தி அப்படி.

ஆனால் அந்தச் சமயத்தில் மாமன் திரும்பி வரவும் துணிகொண்டு துடைத்தாற்போல அவளுடைய சிரிப்பு மறைந்து முகம் சினத்தில் சிவந்தது.

''அம்மாவோடு கூடப் பிறந்தவர் என்று நம்பி வந்ததற்கு என் அம்மாவின் அடிவயிற்றில் தீ வைத்துவிட்டீர்களே. இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடாது பாவீ!'' என்று குமுறினாள்.

அவளிடம் இந்தமாதிரி கொதிப்பை ஒரு நாளுமே கண்டிராத சிதம்பரம் முகம் வெளிறிப் போனார்.

''சின்னக்குட்டீ...'' என்று சமாதானமாக ஏதோ பேசத் தொடங்கினார்.

''அப்படி என்னைக் கூப்பிடாதீர்கள்'' என்றாள் மதுரா ஆத்திரத்துடன். ''என் அப்பா ஆசையாக உண்மையான பாசத்தோடு செல்லமாக அழைத்த பெயர் அது. உங்களைப்போல அடுத்துக் கெடுக்கிற சுயநலவாதிகளுக்கு அந்தப் பெயர் கொண்டு என்னை அழைக்கும் தகுதி கிடையாது''. என்றாள்.

''இல்லை சின்...இல்லைம்மா. நான் கூட இந்த அளவுக்கு வரும் என்று எண்ணவில்லை தாயே. எப்படியும் ஜெயித்து விடலாம்; பணத்தைக் கொடுத்து விடலாம் என்றுதான் நினைத்தேன்.''

''நினைத்திருப்பீர்கள்! அப்படி ஒரு நம்பிக்கை இருந்தால் நீங்களே கையெழுத்துப்போட்டுப் பணம் வாங்குவது தானே. தம்பியை ஏன் மாட்டி விடவேண்டும்?'' என்று நம்பாமல் பேசினாள் அவள்.

''இல்லை குட்டி. பாதிக்கு நானும் போடுகிறேன் என்றுதான் சொன்னேன். அவர்தான் 'முடியாது, மனோகரன் மட்டும்தான் போடவேண்டும்' என்று விட்டார்'' என்று விளக்கினார் சிதம்பரம்.

''அதெப்படிச் சொல்லுவார்'' என்று நம்பிக்கை இன்மையை வெளிப்படையாகக் காட்டினாள் மதுரா.

''சத்தியமாய்ச் சொன்னாரம்மா. 'நீ தரகு ஆள். உன்னை நம்பமாட்டேன். அவன் மட்டும் போடட்டும்' என்று சொன்னாரம்மா' என்று பரிதாபமாய்ப் பேசினார் அவர்.

''சரி சரி அந்தப் பேச்சை விடுங்கள். உங்களிடம் ஏதாவது பணம் இருக்கிறதா!'' என்று விசாரித்தாள் மதுரா.

''உனக்குத்தான் என் நிலைமை தெரியுமே, சின்னக் குட்டி. அத்தை அறியாமல் என்னிடம் பணம் ஏது? அப்பப்போ ஒன்று இரண்டு சிகரெட்டுக்குக் சில்லறை தவிர...ம்ஹீம்'' என்று கைகளை விரித்தார் சிதம்பரம்.

''சரி சரி போகட்டும். இப்போது மனோவுடன் சென்று அவரிடம் பேசிப்பாருங்கள்'' என்று அனுப்பி வைத்தாள் மதுரா.

இருவருமாகச் சென்றுவந்து சொன்னபதில் அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

அடிப்படை அளவில் அவளது திட்டம்தான் ஒத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால் எங்கானும் வேலை செய்வதைவிட இருவருமாக அவனிடமே வேலை செய்து தீர்க்க வேண்டும் என்றான் கடன் கொடுத்திருந்தவன்.

அதை வெறும் யோசனையாகச் சொல்லவில்லை.

உத்தரவாக இட்டிருந்தான்.

அக்காவும் தம்பியுமாக அவனிடமே தான்—அல்லது அவரிடம் என்று சொல்லவேண்டுமோ?— எப்படியோ, அந்த ஆளிடமே தான் வேலை பார்த்தாக வேண்டும் கடன் தீரும் வரை.

சம்பள விஷயத்தில் அவன் கஞ்சத்தன்மை காட்டவில்லை. உணவு உறைவிடம் போக ஆளுக்கு ஒரு நூறு தருவதாகச் சொன்னானாம். கைச் செலவு போக மாதம் ஆயிரமாகத் திருப்ப வேண்டுமாம். வட்டிகூட அதிகம் போடுவதாக இல்லையாம். வட்டி கடனும் தீர மூன்று ஆண்டுகள் உழைத்தால் போதும்.

''ஆனால் நீ என்னவேலை செய்வாய் மனோ? உன் படிப்புகூட முடியவில்லையே? அதைச் சொன்னாயா?'' என்று வினவினாள் மதுரா.

வயதுக் கணக்குக்கு அவனது படிப்பு முடிந்திருக்க வேண்டும்தான். ஆனால் இடையிலே மூன்று ஆண்டுகள் சுகக்கேடும் பலவீனமுமாக அவன் படிப்பு வீணாகிப் போய் விட்டிருந்தது.

''சொன்னேன் அக்கா. ஆனால் நம் இருவருடைய தகுதிக்கும் 'பொருத்தமான வேலைகள்தான் தரப்படும் என்று சொல்லிவிட்டார்!'' என்றான் மனோகரன்.

''அதுதான் என்ன வேலையடா?''

''கேட்டேன் அக்கா. அதை அங்கே வந்து தெரிந்து கொள்ளக் கூடாதாக்கும் என்று கோபமாகக் கூறவும் விட்டுவிட்டேன்...'' என்று இருந்தான் இளையவன்.

''சொல்வதை முழுவதும் சொல்லி முடியேண்டா!'' என்றாள் மதுரா சலிப்புற்று.

''நம் அம்மாவை விட்டுவிட்டு நாம் இருவரும் செல்வது முடியாது! அதனால் நான் மட்டும் வருகிறேன்'' என்று சொல்லிப் பார்த்தேன் அக்கா. அப்படி எடுத்துக் கொள்ளத் தனக்கு உத்திரவு இல்லை என்றார்'' என்றான் மனோகரன்.

''உத்திரவு! என்றால்...உனக்குக் கடன் கொடுத்தவ ரோடு நீ பேசவில்லை.

''இல்லையக்கா. அவருடைய மானேஜராம். வருவது என்றால் இருவருமாகச் சேர்ந்துதான் வரவேண்டும் என்கிறார்.''

''முடியாது என்றால்?''

''மேலே நடவடிக்கை எடுப்பார்களாம்'' என்றான் சின்னவன் சிறு நடுக்கத்துடன்.

மேலேநடவடிக்கை என்றால் கோர்ட்டுக்குப் போவது தானே போகட்டுமே. கோர்ட், கேஸ் என்று போனால் அதெல்லாம் தீர ஆண்டுக்கணக்கில் ஆகுமே...ஆனால் வழக்காடுவது யார்? வாங்கின பணத்தை இல்லையென்று எப்படிச் சொல்வது? நியாயமில்லையே! வேறு என்ன வென்று வழக்காடுவது? மேலும் வழக்காடப் பணம்?

''கோர்ட், கேஸ் என்று போனால் விட்டுவிட வேண் டியதுதான் என்று நினைத்தேன், அக்கா. ஆனால்...''

''ஆனால்?''

''முதல் நடவடிக்கையாக என் படத்தைப் பத்திரிகை களில் பெரிய அளவில் போட்டு...''

''இதென்ன முட்டாள்த்தனம்? உன் படம் பத்திரிகை யில் போட்டால் இவர்களுடைய பணம் திரும்பி வந்து விடுமாக்கும்!'' என்றாள் மதுரா மௌனமாக.

''அப்படி இல்லையக்கா. என் படத்தைப் போட்டு இவர் எங்களிடம் பெரும் கடன் பட்டிருப்பதால் மற்ற வர்கள் கடன் கொடுத்தால் முதல் பாத்தியதை கிடைக் காது என்று...'' மேலே பேச முடியாமல் நிறுத்தினான் மனோகரன்.

மதுராவும் பேச்சிழந்து போனாள்.

இது என்ன மிரட்டல்! அதுவும் எவ்வளவு சக்தியுள்ள மிரட்டல்!

''ஒருவாறு சமாளித்துக் கொண்டு, என்ன வேண்டு மானாலும் செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி விடலாம் என்று பார்த்தேன். ஆனால் அம்மா...அம்மா தாங்க மாட்டார்கள் இல்லையா? அம்மாவாகப் பேப் பரைப் பார்க்கப் போவது இல்லை என்றாலும் அத்தை போதுமே.'' என்றான் மனோகரன்.

ஏதோ தோன்றவும், ''ஏன் மறுக்க நினைத்தாய் மனோ?'' என்று வினவினாள் மதுரா.

''உன்னையும் உள்ளே இழுப்பது எனக்குப் பிரிய மில்லை.'' என்றான் தம்பி முகம் இறுக.

சிறு வியப்புடன் அவனையே பார்த்து, ''அதுதான் ஏன் என்றேன்.'' என்றாள் அவள் விடாமல்.

முகம் சிவக்க, ''நீ...நீ ஓர் அழகான பெண் அக்கா.'' என்று இயம்பினான் மனோகரன்.

சட்டெனப் பாரம் இறங்கியது போல இலகுவாய் உணர்ந்தாள் மதுரா.

இனி வரப் போவது என்னவாக இருப்பினும் சரி; தம்பி வளர்ந்துவிட்டான் என்பதைப் புரிந்து கொண் டாள்.

தனியாளாகச் சுமந்தது போகக் கைகொடுக்க ஒரு தம்பி உருவாகிவிட்டது உள்ளத்திற்குத் தென்பை அளித்தது,

கூடவே இன்னொன்றும் தோன்றி மனதிற்கு ஆறுதல் அளித்தது,

மிகம் தெளிவுற, ''தப்பு எண்ணம் ஏதும் இருந்திருந் தால் உன்னையும் சேர்த்து வேலைக்கு அழைத்திருக்க மாட்டார்களே, மனோ? உன் அக்கா மட்டும்தான் வர வேண்டும்; நீ அந்தப் பக்கமே எட்டிப் பார்க்கக் கூடாது என்றல்லவா உத்திரவு பிறந்திருக்கும்?'' என்றாள் தம்பியிடம்.

சிறு தயக்கத்தின் பின், ''ஆ...ஆமாம். ஆனால் மெய் யாகவே அப்படித்தான் இல்லையாக்கா?'' என்றான் இளையவன்.

''அப்படியேதான்.'' என்று அடித்துச் சொன்னாள் அவனுக்கு முன் பிறந்தவள்,

தொடர்ந்து, ''சரி என்று சொல்லி விடுகிறாயா? ஆனால்...அம்மாவிடம் என்னவென்று சொல்வது? நம் இரண்டு பேருக்கும் சேர்த்து வெளியூரில் நல்ல வேலை கிடைத்திருக்கிறது; நிறைப் பணத்தைச் சீக்கிரமாகச் சேமித்து எனக்கு நல்...ல்ல இடத்தில் திருமணம் செய்ய லாம் என்று சொல்லிவிடலாம்.'' என்று உதட்டைச் சுளித்தாள்.

''ஆனால் பிறகு விஷயம் தெரிந்து விடுமே...''

''அதற்கு இன்னமும் மூன்று ஆண்டுகள் இருக் கின்றனவே. பிறகு பார்த்துக்கொள்ளலாம் அதை.'' என்றாள் மதுரா விட்டேற்றியாக.

ஆனால் தம்பியின் முகக் கலக்கம் தீராததைக் கண்டு. ''மூன்று வருஷங்கள் என்பது நீண்ட காலம் மனோ. அதற்குள் எத்தனையோ நடக்கலாம். நடப்பது நமக்கு நல்லதாகவும் இருக்கலாம்.'' என்றாள் ஆறுதலாக.

''நல்லதா! நமக்கா?'' என்றான் மனோகரன் நம்பிக்கையற்று.

''இல்லையா? இப்போதைய நிலைமையையே எடுத்துக் கொள். இனி நீ குதிரைப் பந்தயம் ஆடுவாயா?''

''குதிரையா?''என்று உடல் சிலிர்த்தான் மனோகரன்.

''பார்த்தாயா? தப்பிலிருந்து கற்பது என்பார்கள். அப்படிக்கற்பதை இளவயதிலேயே கற்றுக் கொண் டாயே. அதுவே ஒரு நன்மையில்லையா? இனியும் நல்லது தான் நடக்கும் பார்.'' என்று அடித்துச் சொன்னாள் அவள்.

ஆனால் அந்த நம்பிக்கை வெகு விரைவிலேயே அஸ்திவாரம் இல்லாத மாளிகை போல அடியோடு நொறுங்கி விழக்கூடும் என்று அப்போது அவள் சற்றும் எதிர்பார்க்க வில்லை.

4

தம்பியின் மனதில் ஊட்டிய நம்பிக்கை தன் மனதிலும் தலை நீட்டுவதை ஓர் ஆறுதலுடன் மதுரா உணர்ந்தாள்.

இருவருமாக இள வயதில் ஊக்கத்துடனேயே மேலே திட்டமிடத் தொடங்கினர்.

தொடங்குமுன் மனோகரனுடைய முகம் மீண்டும் இருண்டது.

''அக்கா, அம்மா? மாதா மாதம் நீ கொண்டு வரும் எண்ணூறு ரூபாயையும் அப்படியே கொடுத்தும் கூட அத்தைக்கு திருப்தி கிடையாதே. இப்போது அதுகூட இல்லாமல் அம்மாவை எப்படி நடத்துவார்கள்?'' என்று கவலைப்பட்டான்.

மதுராவுக்கும் அதே கவலைதான்.

''எதற்கும் மாமாவிடம் பேசிப் பார்க்கலாம்''. என்று முடிவு செய்தார்கள்.

இவர்கள் எதிர்பாராத அளவுக்குச் சிதம்பரம் உதவியாக இருந்தார்.

மகனை ஒத்த சிறுவனைக் கெட்டுப் போகச் செய்து இக்கட்டில் மாட்டி வைத்துவிட்டது பெரும் பிழை என்று உணர்ந்தாரோ, என்னவோ?

''புவனியை நான் பார்த்துக் கொள்கிறேன். எப்படியாவது கூடக் கொஞ்சம் சம்பாதித்து நீங்கள் அனுப்பியதாகச் சொல்லிப் பெருந்தேவியிடம் கொடுத்தால் அவள் தொந்திரவு இராது. அதை நான் எப்படியோ சமாளித்துக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் இருவரும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். ...மனோ, நீதான் இனிப் பெரியவனாய் அக்காவைக் கவனித்துக்கொள்ளவேண்டும். அவள் என்ன இருந்தாலும் பெண்...நீதான்..." என்று முடிக்க முடியாமல் தடுமாறினார்.

ஆச்சரியமாய் அவரைப் பார்த்துவிட்டு, ''மாமா, நான் எப்போதும் கத்தி வைத்திருப்பவள். என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும். நீங்கள் அம்மாவை நன்றாக வைத்துக் கொண்டால் போதும்.'' என்றாள் மதுரா.

''அதைப் பற்றிய சந்தேகமே இல்லாமல் தைரியமாய் இருங்கள் என் பிழைக்கு ஒரு பரிகாரம் என்றேனும் புவனியை நன்றாகப் பார்த்துக் கொள்வேன்.'' என்று உறுதி கூறினார் சிதம்பரம்.

மக்கள் இருவரையும் ஒரு சேரப் பிரிவதற்கு புவனேசுவரி இலகுவில் சம்மதிக்கவில்லை.

நிறைய்...யப் பணம் கிடைக்கும்.

அதனால் விரைவிலேயே மதுராவுக்கு மணமகனாய் ஒரு ராஜகுமாரன் கிடைப்பான்.

வெகு சிறப்...பாகத் திருமணம் நடக்கும்.

மனோகரனோ இருபத்தி ஒரு வயதிலேயே சம்பாதிக்கப் போகிறான், அதுவும் அதிகமாக.

பிறகென்ன?

ராஜயோகம்தான்.

வாயைப் பிளந்த அன்னை, கடைசியாக, ''நானும் கூடவே வந்து கிடக்கிறேனே.'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

அதையும், ''வேலை பார்க்கிற இடத்தில் ஹாஸ்டலில் இருக்கவேண்டும், அம்மா.'' என்று கூறிச் சமாளித்தார்கள்.

அலுவலகத்தில் வினோதனின் திகைத்த பார்வையைச் சந்தியாது தரையைப் பார்த்தே பேசி முடித்தாள்.

நிறையச் செலவு...அங்கே நிறையச் சம்பளம்...அது இது என்று.

''எல்லாவற்றுக்கும் இங்கேயே வகை செய்ய முடியும், மதுரா. மிக உயர்ந்த பதவி கூட..." என்று அவன் குறிப்பாகப் பேச முயன்றபோது அவசரமாக இடைமறித்தாள்.

''ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு விட்டேன்... வார்த்தை மாறுவது எனக்கு வழக்கமில்லை.'' என்றாள் உறுதியான குரலில், 'வழக்கமில்லையா?' என்று இடித்த மனதை அடக்க முயன்றபடி,

வினோதனின் உதவியால் விடுப்புச் சம்பளம் அதுஇது என்று ஓர் இரண்டாயிரம் ரூபாய் கையில் வந்தது.

அன்னைக்கு மாதாமாதம் அனுப்ப உதவும் என்று யாருக்கும் சொல்லாமலேயே வைத்துக் கொண்டாள்.

''சிறு சிரமம் என்றாலும் வந்துவிடு மதுரா. இங்கே உனக்கு ஒரு பதவி எப்போதும் காலியாக இருக்கும்.'' என்ற அவளிடம் அரைகுறையாய்ப் பேசி முகவரியைக் கொடுக்காமலே விடை பெற்றாள்.

''எனக்கு என்னமோ சரியாகப் படலை.'' என்ற அத்தைக்கும் பதிலே கிடைக்கவில்லை.

ஒரு வழியாக இரவு ரயிலில் ஏறி அமர்ந்த தமக்கை, தம்பி இருவருக்குமே உறக்கம் மறந்து போயிற்று.

எல்லோரும் படுத்துவிட்டதை உணர்ந்து ''தூங்க வில்லையா, மனோ!'' என்று தம்பியை அழைத்தாள்.

''ச்சு தூக்கமே வரவில்லை...அக்கா, அங்கே யாரா வது உன்னிடம் தப்பாக நடக்க முயன்றால் அப்படியே கொன்று போட்டு விடுவேன்.'' என்றான் அவன் ஒன்றுக் கொன்று தொடர்பற்று.

''சேச்சே, அதற்கொன்றும் அவசியம் இராதடா. மாமாவைப் போலவே நீயும், என் கத்தியை மறந்து விட்டாயே. நான் பெரிய 'வாத்தியார்' இல்லை என்றாலும் என்னிடம் வாலாட்டுகிறவர்களுடைய வாலை அறுக்க என்னாலேயே முடியும். அதனால் கவலைப் படாமல் தூங்கு.'' என்று முறுவல் செய்தாள் மதுரா.

ஓரளவு சமாதானம் அடைந்து படுத்தான் சின்னவன்.

விடிகாலையில் பங்களூரில் இறங்கியபோது காற்று சிலுசிலுவென்று குளிர்ந்தது.

ஆட்டோவில் ஏறிச் செல்ல வேண்டிய இடத்தைச் சொன்னதும் 'நாலு ரூபாய்' என்றார் டிரைவர்.

சென்னைவாசிகளான அந்த இருவருக்கும் இந்த 'நாலு ரூபாய்' வியப்பை அளிக்க ஒருவரை ஒருவர் பார்த்து முறுவலித்தபடி ஏறிக் கொண்டனர்.

''இதுதான் பஞ்சவடி காம்ப்ளக்ஸ்'' என்று ஆட்டோ டிரைவர் அவர்களை இறக்கிவிட்ட இடத்தைப் பார்த்ததும் மதுராவின் விழிகள் வியப்பால் விரிந்தன.

அவள் எண்ணியது போலப் 'பஞ்சவடி காம்ப்ளக்ஸ்' அலுவலகக் கட்டிடங்கள் அடங்கிய பகுதி அல்ல; தொழில் கூடமும் அல்ல.

இந்தப் பஞ்சவடி ஒரு பெரிய ஹோட்டல். ஆங்கில 'எல்' வடிவில் நாலு தளங்களுடன் பெரியதான கட்டிடம்.

முன்புறம் பெரிய புல் வெளியும், பல நிறம் காட்டிய அழகிய செய் ஊற்றும், சீரான அமைப்புகளில் மலர்ந் திருந்த வண்ண மலர்களும் கண்களைக் கவர்ந்தன.

ஒரு புறமாய் தனித் தனியாக, வெகு வசதியாய் அமைந்திருந்த காட்டேஜ்கள் வேறு. வியப்புடன் கண்கள் மலர நின்றவளுக்கு ஏதோ உறுத்தியது.

சட்டெனத் திரும்பிக் கட்டிடத்தின் மறுபகுதியைப் பார்த்தாள்.

அந்தப் பெரிய கட்டிடத்தில் ஊசலாடிய அழகிய சன்னல் திரைகளின் பின்னேயிருந்து யார் வெறித்தார் களோ?

அதற்குள் ஆட்டோவுக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டிருந்த மனோகரன் கனமான பெட்டியைத் தூக்கிக் கொண்டு, ''வா அக்கா.'' என்றான்.

எதிரேயே வரவேற்புப் பகுதி இருந்தது.

இளம் பச்சை வண்ணச் சேலையும் ஸ்வெட்டரும் அணிந்திருந்த மூன்று அழகியருள் ஒருத்தி ''மே ஐ ஹெல்ப் யூ?'' என்று கிண்கிணிக் குரலில் விசாரித்தாள்.

யார் என்று பெயரைச் சொன்னதும் அவள் கண்களில் பரிகாசம் தோன்றினாற் போல இருந்தது மதுராவுக்கு.

மதுராவின் கண்களில் கேள்வியைக் காணவும் அவள் சட்டென விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

சற்றுக் காத்திருக்குமாறு கூறிவிட்டு, முன்னே கவுண்டரில் பச்சையும், வெள்ளையும், சிவப்புமாய்ப் பளபளத்த டெலிஃபோன்களில் வெள்ளையை எடுத்துப் பேசினாள்.

''ரெட்டி, உன் பறவைகள் வந்தாயிற்று. அனுப்புகிறேன்.'' என்றாள் கன்னடத்தில்.

வார்த்தைக்கு வார்த்தை என்று இல்லாவிட்டாலும் மொத்தத்தில் புரிந்து கொள்ள முடிந்தது.

டெலிஃபோனை வைத்துவிட்டு, ''மாடிக்குச் சென்று வலது புறம் முதல் அறையில் ரிபோர்ட் பண்ணுங்கள்.'' என்றாள் வரவேற்புப் பெண்.

மனோகரன் லிஃப்டின் பக்கம் திரும்புவதைக் கண்டதும், ''அந்தப் பக்கம் படியேறிச் செல்லுங்கள். இந்த லிஃப்ட் பணியாட்களுக்கு அல்ல.'' என்றாள்.

இருவருமாகப் பெட்டி படுக்கையுடன் படியேறினார்.

அலுவலகத்துக்குப் பதிலாகப் பெரிய ஓட்டலில் வேலை. ஓட்டல் என்றாலும் கணக்கு வழக்குகள் ஃபைல்கள் இருக்குமல்லவா?

இது வரையிலும் இருவரும் அடியோடு எதிர்பாராதது என்று எதுவும் நிகழவில்லை.

ஆனால் படியேறிச் சென்று அந்த ரெட்டியைப் பார்த்த பிறகே எதிர் பார்த்தது என்று எதுவுமே நடக்கவில்லை.

ஒரு பெரிய மேசையின் பின்னே அமர்ந்திருந்த ரெட்டிக்குச் சுமார் ஐம்பது வயது இருக்கும்.

சொடு சொடுவென்ற உடல் அமைப்பு. ''மதுராவா / பெயர்? உன் 'ஃபீஃப் அபீதா, அதோ அங்கே. உன் வேலை பற்றி அவளிடம் கேட்டுக் கொள். இந்தாப்பா, நீதான் மனோகரனா? வா. உனக்கு ஆண்கள் பகுதியில் ரூம் கொடுத்திருக்கிறது. காட்டேஜ் ஏரியாவில் உனக்கு வேலை. பீட்டர், பீட்டர், இதோ, மனோகரனைக் கூட்டிப்போ. ரூமைக் காட்டிவிட்டுக் காட்டேஜ் சுற்றி வேலை செய்யச் சொல்.''

காட்டேஜைச் சுற்றி என்ன வேலை?

சிந்திக்கு முன், ''உன் சாமான்களை எடுத்துக் கொள். சீக்கிரமாய்ப் போய் ஒரு டீ குடித்துவிட்டு வேலையைத் தொடங்கு போ. கஸ்டமர்கள் விழிக்கு முன் வேகமாய் வேலை நடக்கவேண்டும்.'' என்று மனோகரனை அவசரப்படுத்தி அனுப்பி வைத்தார்.

ஆனால் அந்தப் பேச்சைக் கவனிக்கக் கூட நேரம் தராமல் அபீதா மதுராவை, ''இங்கே வா.''என்று அழைத்தாள்.

''மதுரா, மனோகரன் பெயருக்கொன்றும் குறைச்சல் இல்லை.'' என்று உதட்டைப் பிதுக்கினாள்.

ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு பேசாமல் நின்றாள் மதுரா.

இந்த அபீதாவுக்கு அவளை ஏன் பிடிக்கவில்லை?

''உன் பெட்டியை எடுத்துச் சென்று உன் அறையில் வைத்துவிட்டு நீயும் வேலையைத் தொடங்கு. சந்திரம்மா, உன்னிடம் சொல்லியிருக்கிறேன் இல்லையா? அறைக்குக் கூட்டிப் போ. சீக்கிரமாக வேலையைத் தொடங்கச் சொல்லு. நாலாவது மூன்றாவது தளங்களை இவளிடம் கொடு. ஓடு ஓடு. சீக்கிரம். 'பாஸ்' விழிப்பதற்குள் வேலை முடியவேண்டும். ம்.'' என்று விரட்டினாள்.

பாஸ் விழிப்பதற்குள் என்ன காரியம்?

அதுவும் இரண்டு தளங்களில்?

தம்பிக்கானால் காட்டேஜைச் சுற்றி அது என்ன வேலை?

குழப்பத்திற்கு முடிவே கிடையாதா?

இந்தச் சந்திரம்மாவைப் பார்த்தால் கூட்டிப் பெருக்கும் ஆயா போலத் தோன்றுகிறதே.

தோன்றுவது மட்டும் அல்ல.

மெய்யாகவும் அப்படியேதான் என்று அவளே சொன்னாள்.

''இத்தினி நாளும் நானும் என் தங்காச்சியும் செய்தோம்மா. நேத்திக்கித் திடீர்னு தங்காச்சியை மலைப் பக்கம் அனுப்பிட்டாங்க...கொண்டாம்மா. பெட்டி கனம் போல இருக்குதே. நான் தூக்கியாரேன்...''

கொச்சைத் தமிழில் ஒரு ராகத்துடன் இழுத்துப் பேசினாள் சந்திரம்மா.

சிறுவியப்புடன், ''இங்கே கன்னடம் ஆயிற்றே. நீயானால் தமிழ் பேசுகிறாயே?'' என்று விசாரித்தான் மதுரா.

''மூக்கா வாசியும் இங்கே நம் ஆளுங்கதாத்மா. முதலாளி தமிளருதான். இதோ இதாம்மா ஒன்னோட ரூம்பு.''

அறையைப் பார்த்த மதுரா முதலாவதாக அதிர்ந்தாள்.

உணவு, உறைவிடத்துக்கும் சேர்த்து அவளுடைய சம்பளம் ஓர் ஆயிரம் ஆகாதா?

ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் ஒருத்திக்கு உரிய அறை நிச்சயமாக அது இல்லை,

ஓரமாக கிடந்த ஒற்றை பெஞ்ச் தவிர ஒன்றுமே இல்லை.

சன்னல் கண்ணாடி கூட உடைந்திருந்தது.

இப்போதே இப்படிக் குளிர்கிற இந்த அறை இரவில் எப்படி இருக்கும்?

நல்ல வேளை சுத்தமாகவேனும் இருந்ததே.

''நேத்திக்கு நான்தாம்மா கிளீன் பண்ணேன். நேரமாவுது. வா ஒரு சாயா அடிச்சுட்டு வேலையைத் தொடங்கலாம். பாவம் எப்படித்தான் செய்யப் போறியோ? கஸ்டமா இருந்தா ! என்னைக் கூப்டும்மா. வாரேன்.'' என்றாள் சந்திரம்மா. இரங்கும் குரலில்.

என்ன கஸ்டம்?

கஷ்டமாகவே இருந்தாலும் இவள் வந்து என்ன உதவி செய்யக்கூடும்?

டைப் அடிப்பாளா? லெட்ஜர் கூட்டுவாளா?

ஆயினும் உதவ முன்வந்த குணம் கண்டு மனம் நெகிழ்ந்தது.

கூடவே பழைய நெருடல்.

இரண்டு தளங்களில் எப்படி வேலை செய்வது?

குழப்பம் எல்லாம் விரைவிலேயே தீர்ந்தது.

மேல் தளத்துக்கு அழைத்துச் சென்று அந்தச் சந்திரம்மா துடைப்பத்தை எடுத்து அவள் கையில் கொடுத்த போது.

5

சந்திரம்மா துடைப்பத்தை நீட்டவும் திகைத்துப் போனாள் மதுரா.

மேலே சந்திரம்மா பேசிய போதோ..

"இப்ப மொதல்லே வராந்தாவும் பால்கனியும் பெருக்கித் துடைக்கணும். அப்புறம் கஷ்டமருங்க வெளியே போன பெறவு ரூம்புக் குள்ளார எல்லாம் செய்யோணும்..." என்றவள் மதுரா பேந்த விழிப்பதைக் கவனித்தாள்.

தன்னளவில் யோசித்து முடிவு எடுத்து, "ஒன்னப் பாத்தாக்க படிச்ச பொண்ணு மாதிரிக்கீது. நீ ஏம்மா இந்த வேலைக்கெல்லாம் வந்த? ஒட்டிலே ரொம்பக் கஸ்டமா? ஆனாலும் வேற வேலையே கெடைக்காமலா போயிடும்! சரித்தான், வருத்தப்படாத. பெருக்கத் தெரியுமில்ல? அந்த 'மாப்பை' வைத்துத்தான் தரையெல்லாம் தொடைக்கோணும். செய்யத் தெரியுமா? தெரியாங் காட்டி என்னையக் கூப்பிடு. நான் வந்து சொல்லித் தாரேன்". என்று கூறி அகன்றாள்.

பத்து மணிக்குத் தொடங்கித் துணியில் அழுக்குப் படாமல் செய்த ஆபீஸ் வேலை நினைவு வந்தது.

கம்பெனி செகரட்டரி ஆக வேலை செய்தவளை இங்கே கொணர்ந்து கூட்டிப் பெருக்க வைப்பது என்றால் என்ன அர்த்தம்?

பணத்தை ஏமாற்ற முயன்றதாக எண்ணித் தொடங்கியுள்ள பழிவாங்கு படலமா?

அல்லது பிறரை இம்சித்து இன்பம் காணும் குரூரமான ஸேடிஸ்டா?

காட்டேஜின் வெளியே தம்பிக்கும் இதே வேலையா?

அம்மாவின் செல்லப்பிள்ளை இப்போது எப்படி நொந்து போயிருக்கிறானோ!

"சும்மா நின்று கொண்டிருந்தால் துடைப்பம் தானாகப் பெருக்கி 'மாப்' தானாகத் துடைத்துவிடுமா?" என்றது அபீதாவின் கடுமையான குரல்.

மதுரா அநியாயத்துக்குப் பணிந்தது கிடையாது.

இப்போதும் தம்பி கை நீட்டி வாங்கிய பணம், அதை எப்படியும் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்ற காரணம்தான் கடன் கொடுத்தவனுடைய நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு அவள் இங்கு வந்ததே.

ஆனால் எதற்கும் அளவு இருக்கிறதில்லையா?

நிமிர்ந்து, "என்னுடைய வேலைகள் என்னென்ன?" என்று விசாரித்தாள்.

"சொல்வதைச் செய்வது" என்று முகத்தில் அறைவது போலப் பதில் வந்தது.

"அதில் முதலாவது இரண்டு தளங்களைப் பெருக்கித் துடைப்பது. அரைமணி நேரத்திற்குள்ளாகச் செய்து முடிப்பது." என்று எகத்தாளமாகப் பதில் வந்தது.

"முதலாவதா? சரிதான். ஆனால் அப்புறம் செய்ய வேண்டிய மற்ற வேலைகளையும் சொல்லி விடுங்களேன்." என்றாள் மதுரா.

நடக்க தொடங்கியிருந்த அபீதா நின்று திரும்பி மற்றவளை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தாள். ஓர் உதாசினமான பார்வையுடன், "கீழ்வேலைகள்—உன்னைப் போன்றவர்கள் செய்யத் தகுந்த அடிமட்ட வேலைகள்—எத்தனையோ இருக்கின்றன. துடைத்து முடித்தபின், கஸ்டமர்களின் அறைகளைச் சுத்தம் செய்ய வேண்டும். படுக்கை விரிப்புகள் துணிகள் சலவை செய்ய வேண்டும். பாத்திரங்களைக் கழுவலாம். ஏன் பாத்ரூம் கழுவலாம்... எத்தனையோ வேலைகள். எல்லாம் உரிய நேரத்தில் உனக்குத் தரப்படும். இப்போது சோம்பல் இல்லாமல் வேலையைத் தொடங்கு." என்று அதிகாரம் செய்தாள்.

"என் தம்பிக்கு என்ன வேலை?" என்று குரல் மாறாமலே வினவினாள் மதுரா.

சித்ரவதைப் படலம் இவளிடமே இவ்வளவு என்றால் பணத்தை வாங்கிய தம்பியிடம் எவ்வளவு தூரம் பாயக் கூடும்!

பாவம், சின்னவன் ஆயிற்றே என்று கலங்கினாள் மதுரா.

ஆனால், "உன் தம்பிக்கா?" என்று கேலிக் குரலில் கேட்டுத் தளுக்காக மேல் உடம்பைக் குலுக்கினாள் அபீதா. "அவன் என்ன வேலை செய்கிறான் என்பதை அவனிடம் தான் கேட்க வேண்டும்."
என்றாள் அலட்சியமாக.

படிப்பக்கம் மதுரா திரும்பவும், "இப்போதே உன் வேலை தொடங்கப் பத்து நிமிடம் தாமதம் ஆகியிருக்கிறது. இன்னமும் தாமதம் செய்தால் உன் சம்பளத்தைக்

'கட்' பண்ணவேண்டியிருக்கும்." என்று கடுங்குரலில் எச்சரித்தாள் அபீதா.

சம்பளம்!

அதாவது பணம்.

இந்தப் பணத்தைத் திருப்புவதற்காகத் தானே இந்தப் பாடு படுவது!

பரவாயில்லை: மானத்துக்குப் பங்கம் வராத அளவில் எந்த வேலை செய்தால் என்ன?

வேறு பேச்சுப் பேசாமல் துடைப்பத்தை எடுத்துப் பெருக்கத் தொடங்கினாள் மதுரா.

ஓர் அலட்சிய 'ஹ¨ம்' உடன் அகன்றாள் அபீதா.

இரண்டு தளங்களையும் பெருக்கி முடிக்கும் முன் முதுகு வலிக்கத் தொடங்கியது.

அங்கும் இங்குமாய் ஓரிருவரின் பார்வையில் மனம் கூசிப் போயிற்று.

திரும்பத் திரும்ப 'மானத்திற்குக் கேடுவராத வேலை கேவலம் அல்ல' என்று உருப்போட்டபடியே பெருக்கி முடித்தாள்.

வாளியில் நீரும், அதிக முருக்கேறாத நூல் கயிறுகள் கோத்த 'மாப்'பும் இருந்தன.

ஒரு முறை மருத்துவ மனை ஒன்றில் பணியாள் ஒருவன் இதைத் கொண்டு துடைப்பதைப் பார்த்த நினைவு வரவும் அதேபோல் கழியைப் பிடித்துக் கொண்டு 'மாப்'பை நீரில் முக்கி எடுத்துத் தரையைத் துடைக்க முயன்றாள் மதுரா.

ஆனால் அரைவாளி நீரைத் தரையில் கவிழ்த்து விட்டாற்போல ஆயிற்று.

அந்தப் பணியாள் எவ்வளவு இலகுவாகத் துடைத் தான்!

இதையும் வாகாகச் செய்ய வழியெடுக்க வேண்டும். கீழ்த்தளத்துக்கு ஓடிச் சென்று சந்திரம்மாவிடம் விவரம் கேட்டு வந்தாள்.

சந்திரம்மா சொன்னது போல நீரில் 'மாப்பை முக்கிய பின் ஒரு முறுக்கு முறுக்கி எடுத்துத் துடைத்த போதும் தரையெல்லாம் தண்ணீரை ஊற்றி விட்டாற் போலத் தான் இருந்தது.

யாரெனும் வழுக்கி விழுந்து விடக் கூடாதே என்ற கவலையில் துடைப்பம் கொண்டு நீரைக் கூட்டித் தள்ளினாள்.

அவள் தவித்துக் கொண்டு இருக்கையிலேயே சந்தி ரம்மா வந்து விட்டாள்.

பரிதாபத்துடன், ''அய்யோ! இன்னாம்மா கண்ணு, வாகு வரலியாங்காட்டியும்?'' என்று கழியை வாங்கினாள்.

வெகு அலட்சியமாக அவள் வாளியில் 'மாப்'பை முக்குவதும், ஒரு திருப்பு திருப்பிப் பிழிவதும், தரையைத் துடைப்பதும் தாளம் தவறாத நாட்டியம் போலத் தோன்றியது.

தன்னுடைய நிலைமையை மறந்து ஆச்சரியத்துடன் அவளைப்பார்த்துக்கொண்டு நின்றாள் மதுரா, ''உனக்கு சம்பளம் ஆபீசில் தருகிறார்களா, அந்தப் பெண் தருகி றாளா?'' என்று அபீதாவின் குரல் அதட்டும் வரை.

''அய்யோ பாவம்மா, இந்தப் பொண்ணு. அதுக்குத் தெரீயல. அதுங்காட்டியும் கத்துக் குடுத்தேன்னா'' கை வீசித் துடைத்தபடியே சந்திரம்மா சமாதானம் சொன்னாள்.

''தெரியுமோ, தெரியாதோ அதைப்பற்றி உனக்கு என்ன வந்தது? அவள் வேலையை நீ செய்வதானால் அவளிடமே சம்பளம் வாங்கிக் கொள். ஆபீசில் நிறுத்தி விடச் சொல்கிறேன்'' என்று மிரட்டினாள் அபீதா.

சந்திரம்மாவின் கண்களில் அச்சத்தைக் காணவும், ''போதும் சந்திரம்மா. எப்படிச் செய்வது என்று இப் போது நன்றாகப் புரிந்துவிட்டது. இனி நானே செய்து விடுவேன்.'' என்று கழியை வாங்கிக் கொண்டாள் மதுரா.

சந்திரம்மா அகன்றதும், ''இது எனக்குத் தரப்பட்ட வேலைதானா? உங்களுக்கு நிச்சயமாகத்தெரியுமா?'' என்று அபீதாவிடம் வினவினாள்.

ஒருவேளை ஆள் மாறாட்டமா என்ற சந்தேகம் அவளுக்கு.

எத்தனை படங்கள் பார்க்கவில்லை?

யார் வேலையையோ இவளுக்குத் தந்து, இந்த வேலைக்கு உரியவளிடம் டைப்ரைட்டரைக் கொடுத் தால்?

ஆனால் அபீதாவின் கண்களில் இகழ்ச்சி தெறித்தது.

''மதுரா என்பது நீ தானே'' என்று கண்களை விரித் தாள்.

பேசாமல் நின்றாள் மதுரா,

''மனோகரன் என்பது உன் தம்பியேதானே. இந்த இரண்டு பேர்களின் டூப்புகள் நீங்கள் இல்லையென்றால் இந்த வேலை உன்னதுதான்! உன் தம்பியின் வேலை புல்தரை செதுக்கி, பெருக்கி, குப்பை வாரிக் கொட்டுவது தான்.'' என்றாள் அபீதா ஏகத்தாளமாக.

தான் செய்கிற வேலை மறந்துவிட்டது மதுராவுக்கு.

புல்தரை செதுக்கி, பெருக்கி, குப்பை வாரிக் கொட்டி...

அவளுடைய தம்பி செய்யக்கூடிய வேலையா அது?

''நான் உங்கள் எம்.டி.ஐப் பார்க்கவேண்டும்'' என்றாள் வேகத்துடன்.

''உன் போலக் கடைநிலை வேலைக்காரிகள் பார்ப்பதற்கென்று எம்.டி. ஏழரை மணிக்கே வந்து காத்துக் கொண்டு இருப்பாரா?'' என்றாள் அபீதா உதாசினமாக.

அவளுடைய உதாசீனத்தைக் கவனியாதவள் போல, ''எப்போது வருவார்?'' என்று வினவினாள் மதுரா.

அவளை ஒரக் கண்ணால் ஒரு தரம் பார்த்துவிட்டு, ''பத்து பத்தரைக்கு எம்.டி. ஆபீசுக்கு வருவார். அவருடைய செகரட்டரியிடம் அனுமதி வாங்கிக்கொண்டு போய்ப் பார். ஆனால் அதற்குள் வேலைகள் முடிய வேண்டும் சீக்கிரம்.'' என்று விரட்டினாள்.

இவளுக்கு என்னிடம் ஏன் இந்த வெறுப்பு?'' என்று உள்ளூர யோசித்தாள் மதுரா.

அல்லது எல்லோரிடமுமே இதே உதாசீனத்துடன் தான் பழகுவாளா?

இங்கே இவளுடைய முக்கியத்துவம் தெரியாமல் இவளை எதிர்ப்பதும் சரியல்ல.

அதுவும் ஆப்பு அசைத்த குரங்கு போல வகையாக மாட்டிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் ஒதுங்கிப் போய் விடுவதே நல்லது.

செய்யும் காரியத்தை பாடுபட்டாகிலும் நீறை வாகவேசெய்யும் பழக்கம் உள்ளவள் என்பதால் ஒருவாறு வேலையும் குறைகாண முடியாததாகவே நடந்தேறிற்று.

அவ்வப்போது பிறந்த ஏவல்களின்படி அறைகளிலும் சுத்தம் செய்யும் பணி முடிந்தது.

கடைசியாக மூன்றாவது தளத்தில் ஓர் அறையைக் சுத்தம் செய்து கொண்டு இருந்தபோது சன்னல் வழியே மனோகரன் தென்பட்டான்.

தெருக்கூட்டும் துடைப்பம் ஒன்றைக் கையில் ஏந்தித் தோட்டத்தைப் பெருக்கிக் கொண்டு இருந்தான்.

இடையிடையே கைகளை இறுக மூடித்திறப்பதையும் விரல்களை இழுத்து விடுவதையும் கண்டபோது எவ்வளவு நேரமாக அவன் இதே வேலையைச் செய்திருக்க வேண்டும் என்பது புரிந்தது.

கைக்குட்டையால் அவ்வப்போது கைகளைத் துடைத்துக் கொள்வதைப் பார்த்ததும் மனம் வெகுவாக வலித்தது.

அழுக்குப் படப் பிடிக்காத அருமைத் தம்பி!

இல்லை, இதைத் தடுத்து நிறுத்தியே ஆகவேண்டும்.

'இதைவிட மட்டமான வேலையானாலும் சரி; அதை நான் செய்கிறேன். என் தம்பியை விட்டுவிடு அப்பா; என்று அந்த முதலாளிடம் மன்றாடியேனும் கேட்டே ஆக வேண்டும். நிச்சயமாய்.

அறைவேலை முடிந்ததும் மணியைப் பார்த்தாள்.

பத்தரையைத் தாண்டியிருந்தது.

மடமடவென்று கீழ்த்தளம் சென்று அலுவலக அறையை அடைந்தாள்.

கீழ்க் கண்ணால் இவளுடைய சிவந்த முகத்தை பார்த்து உதட்டைச் சுளித்தபடி அங்கிருந்து வெளியேறினாள் அபீதா.

எப்படியோ போகட்டும் என்று நினைத்தபடி செகரட்டெரியை அணுகினாள் மதுரா.

''எம்.டி.யைப் பார்க்க வேண்டும்' என்று அவள் மூலம் சேதி அனுப்பினாள்.

வரச் சொல்வதாகக் கூறி ஒரு கதவைக் காட்டினாள் செகரட்டரிப் பெண்.

அவள் உள்ளே சென்றதும் தானாக மூடிக்கொண்டது கதவு.

உள்ளே அந்தப் பெரிய மேசையின் பின்னே இருந்த குஷன் இட்ட சுழல் நாற்காலி காலியாக இருந்தது.

சன்னல் வழியே எதையோ வெறித்தவாறு அவளுக்கு முதுகு காட்டி நின்று கொண்டிருந்தார் எம். டி.

சில கணங்கள் நின்று பார்த்தும் அவர் திரும்புவதாகத் தெரியவில்லை.

தொண்டையைக் கனைப்பது மரியாதைக் குறைவு என்று கருதிய மதுரா, ''மன்னிக்க வேண்டும் ஸார்.'' என்றாள் மெல்லிய குரலில்.

''எதற்காக?'' என்று மெல்லத் திரும்பினார்...இல்லை திரும்பினான் அவன்.

மதுராவின் காலடியில் பூமி நழுவியது.

6

வேலை செய்யத் தெரியாதது போன்று மூளை மரத்துப் போயிற்று மதுராவுக்கு.

வெயிலில் கிடந்த கீரைத் தண்டாய்க் கால்கள் துவண்டன.

தன் போக்கில் மேசைமேல் கை ஊன்றிக் கீழே விழாமல் உடம்பு சமாளித்தது.

பிரமை தட்டினாற்போல நின்ற அவள் முன்னே அழுத்தமான காலடிகளுடன் வந்து நின்றான் அவன்— சத்யன்.

யாரை இனிப் பார்க்கவே போவது இல்லை என்று எண்ணி மனம் ஒடிந்திருந்தாளோ அந்த சத்யன்.

யாரை இனிப் பார்க்கவே கூடாது என்று அருகதை அற்ற மாமன் வீட்டிற்கு ஓடிப் போனாளோ அந்த சத்யன்.

''கேட்டேனே, எந்தக் குற்றத்துக்காக மன்னிப்புக் கேட்கிறாய் என்று?'' என வினவியபடி வந்து நின்றான், அதே சத்யன்,

காலடிப் பூமியோடு நாலு ஆண்டுகளும் நழுவிப் போயின.

நாலு ஆண்டுகள்!

கடைசியில்...கடவுளே!

ஓய்ந்திருந்த நேரத்துக்குமாகச் சேர்த்து இரட்டிப்பு வேகத்துடன் செயல் பட்டது மனது.

குழப்பங்கள் தீர்ந்து போயின.

புரியாதவை எல்லாம் புரிந்து விட்டன.

தண்டனை தம்பிக்கல்ல; தனக்குத்தான் என்பதைத் தெள்ளத் தெளிய உணர்ந்து கொண்டாள்.

எவனைப் பார்த்தாலே மனது தளர்ந்து விடும் என்று ஓடினாளோ அவனிடமே வேலை செய்ய மூன்று வருட ஒப்பந்தம் வேறு.

இதிலிருந்து எப்படி மீள்வது?

திட்டம் போட்டு அவளை இங்கே கொணர்ந்திருப்பதைப் பார்த்தால் மீட்சிக்கு இடம் அளிப்பவன் போலத் தெரியவில்லையே.

ஆனாலும் அவளுடைய சத்யன் இந்த அளவுக்கு இறங்கக் கூடுமா?

அவளைப் பழிவாங்குவது அவனுக்கு நியாயமாகப்படலாம்.

ஆனால் ஓர் அறியாப் பையனை தூண்டிக் கெடுத்து நாசமாக்குவது எந்த வகையில் சரியாகும்?

இப்படி ஓர் அநியாயக் காரனாக அவளுடைய சத்யன் எப்போது மாறினான்?

நம்ப முடியாமல் அவன் முகத்தைப் பார்த்தாள் மதுரா!

பார்த்ததுமே உறுத்தும் அளவுக்கு வித்தியாசமாகத் தெரிந்தன அவனது கண்கள்.

அப்பா! எவ்வளவு கடினம் அவைகளில்!

மேலும் காதோரமாக லேசாகத் தெரியத் தொடங்கியிருந்த சில பல நரை முடிகள், தெரித்திருந்த புருவங்கள் இறுகிப் போயிருந்த தாடை அழுந்த மூடியிருந்த கறுத்த உதடுகள்...

எல்லாம் ஒரு கருங்கல் சிலையின் கடினத்தைதான் திரும்பத் திரும்ப எடுத்துக் காட்டின.

இவனிடம் என்னவென்று எதைச் சொல்வது?

திரும்பிக் கதவை நோக்கி நடக்கலானாள் மதுரா.

''என் கேள்விக்கு நீ இன்னமும் பதில் சொல்லவில்லை?'' என்ற சத்யனின் அழுத்தமான குரல் அவளைத் தடுத்தது.

என்ன கேள்வி, என்ன கேள்வி?

ஒ...எந்தக் குற்றத்துக்காக மன்னிப்பு என்று அந்த 'எந்த'வில் ஓர் அழுத்தம்கொடுத்துக் கேட்டானே, அந்தக் கேள்விக்கா?

அது ஒரு கேள்வியா?

'மன்னிக்கு வேண்டும்' என்று அவள் கூறியது ஒரு சம்பிரதாயச் சொல் என்று தெரியாதா?

வேண்டுமென்றே நாலு ஆண்டுகளுக்கு முன் நடந்ததைக் குறிப்புக் காட்டி அவளைக் குற்றவாளியாக்கிப் பேசுகிறான்.

அவனிடம் எதையும் சொல்ல முடியாத நிலையில் வெறுமனே தலையசைத்து வைத்தாள் மதுரா.

''வந்த காரியம்?'' என்று அடுத்த கேள்வி பிறந்தது.

''ஒன்றுமில்லை,'' என்று மீண்டும் திரும்பினாள் அவள்.

''எதையுமே அரைகுறையில் விட்டே பழக்கமாகி விட்டது. இல்லையா'' என்றான் அவன் வரண்டகுரலில்.

மீண்டும் மறைபொருளோடு பேச்சு.

இந்தக் குத்தலை மூன்று ஆண்டுகள் தாங்கமுடியுமா?

உதட்டைக் கடித்துக் கொண்டு மெல்ல நடந்தாள் மதுரா.

"ஒரு விஷயம்." என்ற அவன் குரல் மீண்டும் அவளை நிறுத்தியது.

"அலரவர் பொறுப்பை அவரவர்தான் நிறைவேற்ற வேண்டும். உன் வேலையை அடுத்தவரைக் கொண்டு செய்வது கூடாது." என்றான் அதிகாரம் காட்டி.

அபீதாவின் பார்வையுடைய பொருள் புரிந்தது.

அவளிடம் நின்று வாதாட மனம் இல்லாமல், "இனி இல்லை." என்று கூறிவிட்டு வெளியேறினாள் மதுரா.

அங்கே அபீதா தயாராகக் காத்திருந்தாள்.

"என்னம்மா, இது உன் வேலைதானா என்று தெளி வாயிற்றா? சீக்கிரம், 'மாப்'பை எடுத்துக் கொண்டுவா, ஆபீஸ் அறையில் கோந்து சிந்தியிருக்கிறது."

பிளாஸ்டிக் பாட்டில், உடைய வழியில்லை.

அந்த திருகு மூடி பாட்டில், சரிந்து ஒழுகவும் வழி யில்லை.

வேண்டுமென்றே கொட்டி வைத்துவிட்டு வேலை வாங்குகிறாள்.

யாரிடம் சொல்வது?

பூசாரி மட்டும் சரியில்லை என்றால் தெய்வத்திடம் முறையிடலாம்.

தெய்வமும் சேர்ந்து வேறுபட்டுப் போனால் சகித்துப் போவது தவிர வேறு வழியேது?

கோந்தைத் துடைத்து நிமிருமுன் அடுத்த வேலை யோடு தயாராக இருந்தாள் அபீதா.

"பித்தளைப் பூச்சாடிகளை எல்லாம் 'பிராஸோ' போட்டுத் தேய்த்துவிட்டு வா."

"அறைகளில் ஒட்டடையை தட்டு"

வரிசையாகவேலைகள்.

இது போன்ற வேலைகளில் பழக்கும் அற்ற கைகள் சோர்ந்து போயின.

உடம்பு ஓய்ந்து போயிற்று.

ஆயினும் முடியவில்லை என்று சத்யனிடம் நிற்கக் கூடாது என்ற ஒரே பிடிவாதத்தில் செய்து கொண்டே இருந்தாள்.

அன்றைய வேலை முடிந்தது என்றதும் அப்பாடி என்று ஒரு நிமிடம் உட்கார்ந்து விட்டாள் மதுரா.

ஆனால் உடனேயே எழுந்து தம்பியை நாடிச் சென்றாள்.

சகோதரியைக் கண்டதும் மனோகரன் அப்படியே அழுதுவிட்டான்.

மெல்ல அவன் கைகளைப் பற்றித் திருப்பிப் பார்த் தாள்.

சிவந்தும், கன்றியும், ஒரோர் இடத்தில் வீங்கிக் கொப்புளங்களோடும் பார்க்கையில் அவளுக்கும் கண்ணீர் பெருகியது.

சட்டெனக் கையை உருவிக்கொண்டான் மனோகரன் "ச்சு இதெல்லாம் ஒன்றும் இல்லை அக்கா. தப்புசெய்த தற்குச் சிறு தண்டனை. ஆனால் நீ...உனக்கு ஏன்."

"நான் ஒன்றும்..." என்று குறுக்கிட்டாள் மதுரா.

"நீ பூச்சாடி கழுவியதை நான் பார்த்தேனே அக்கா." என்று விசித்தான் அவன்.

"ஷ். என்ன தம்பி இது? நம் மாமா வீட்டில் எல்லாம் நான் அவ்வப்போது பாத்திரம் கழுவவில்லையா?" என்று தேறுதலாகப் பேசினாள் அவள்.

"அதுவும் இதுவும் ஒன்றா? நம் வீட்டில் உதவியாய்ச் செய்வது எப்படி? இங்கே...அக்கா, உன் திறமைக்கும் தகுதிக்கும் கூலிக்குப் பாத்திரம் விளக்க வேண்டுமா? என் பிழைக்காக உனக்கு தண்டனை என்பது போலத்தான் இந்தக் கொடுமை?"

"இல்லை மனோ..." என்று தொடங்கிய மதுரா மேலே சொல்ல முடியாமல் நிறுத்தினாள்.

உண்மையில் அவளுடைய கூற்றுக்குரிய தண்டனை தான் இது.

அவனுக்காக தியாகம் செய்வதாக எண்ணி அவள் வந்தது தவறு; சரியாகச் சொல்லப் போனால் அவளது பிழைக்காக, உண்மை அறியாமல் அவன்தான் துன்பத் துக்குள்ளாகி இருக்கிறான்.

ஆனால் இதை அவனிடம் சொல்லமுடியாத நிலைமை யில் மதுரா இருந்தாள்.

மேலும் சொல்லிப் பயனும் தான் இல்லையே.

குற்ற உணர்வு தாக்கத் தலைகுனிந்து நின்றாள் அவள்.

அவளுடைய நிலைமை அறியாமல் மனோகரன் பேசிக் கொண்டே போனான்.

"இந்த ஓட்டல் முதலாளியைச் சந்தித்துக் கெஞ்சிக் கேட்டுப் பார்த்தேன் அக்கா."

சட்டென்று நிமிர்ந்து, 'என்னவென்று?' என்று வின வினாள் அவள்.

"நான் என்ன வேலை வேண்டுமானாலும் செய் கிறேன்; என் அக்காவை விட்டுவிடுங்கள். எனக்காக அவளைத் துன்புறுத்தாதீர்கள் என்று கேட்டேன்."

"அதற்கு அவர் என்ன சொன்னார்?" என்று உணர்ச்சியற்ற குரலில் கேட்டாள் மதுரா.

"உன் அக்கா இப்படிக் கேட்கச் சொன்னாளா? என்று கேட்டார்"

"ஓ!"

அவள் மீதுதான் சத்யனுக்கு எவ்வளவு நம்பிக்கை!

"பிறகு?" என்று தம்பியை ஊக்கினாள் அவள்.

"பிறகு," இங்கே யாரானாலும் அவரவர் தகுதிக்கு உரிய வேலைதான் கொடுப்பார்கள். அதைச் செய்வதோ அல்லது விட்டுப் போவதோ அவரவர் விருப்பம் என்று இரக்கம் இல்லாமல் கூறிவிட்டார்." என்று விசும்பினான் தம்பி.

தகுதிக்கு ஏற்ற வேலையா?

பேச்சுமாறிக்கு ஏற்றவேலை என்று எண்ணினானோ?

ஆனால் அவள் மாறிப் பேசியிருக்கலாம். மனோகரன் பாவம், என்ன செய்வான்?

ஆதரவாக அவன் கைகளைப் பற்றித் தட்டிக் கொடுத் தாள் மதுரா. "ஏதோ, வேலைதானடா! நீ முதலில் பயந்ததுபோல் மானத்திற்குக் கேடு என்ற நிலை இல்லா மல் உழைப்பாக என்று எதைச் செய்தால் என்ன?"

ஆனால் தம்பியின் கண்ணீர் நில்லாததைக் கண்டதும், ''இன்னொரு முக்கிய விஷயம் மனோகர், தைரியம் புருஷ லட்சணம். இந்த மீசையும் கண்ணீரும் கொஞ்சம் கூட பொருந்துவதாக இல்லை.'' என்று மெல்ல நகைத்தாள்.

உடம்பு வெகுவாகக் களைத்திருந்தபோதும் மதுரா வினால் நன்கு உறங்க முடியவில்லை.

வலியெடுத்த உறுப்புகளுக்கு இதமாக உடம்பு முறுக்கி, உருண்டு புரண்டது.

ஒரு தரம் அப்படித் திரும்பியபோது அந்த ஒற்றை பெஞ்சியிலிருந்து கீழே விழுந்து விட்டாள்.

இது வேறு வலியா என்று எண்ணித் தரையிலேயே விரித்துக் கொண்டு படுத்தாள்.

சுற்றுப்புற அரவம் எல்லாம் அடங்கிய பிறகு ஓர் உருவம் மெல்ல அவளது அறையின் சன்னல் அருகே வந்து நின்றது.

உள்ளே உற்றுப் பார்த்தது.

தரையில் அவன் படுத்திருந்த கோலமும் அயர்ந்த தூக்கத்திலும் நிறுத்த முடியாத உருளல் புரளலும் அதன் மனதைத் தாக்கியது போலும்.

கண்களில் படிந்த நீர்ப்படலத்தை மெல்ல விரலால் சுண்டி எறிந்தது.

உடனேயே தன்னிடமே கோபம் கொண்டாற் போலச் சட்டெனத் திரும்பி நடந்தது.

தன்பகுதிக்குள் வந்து படுக்கை அறைக்குள் சென்ற சத்யன் உடனே படுக்கவில்லை.

சற்று நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்.

சன்னல் அருகே வந்து நின்று கொஞ்சநேரம் தொலை தூரக் குன்றுகளை வெறித்தான்.

ஒரு நெடு மூச்சுடன் படுக்கையில் விழுந்தான்.

அரையடி அமுங்கிய ஃபோம் மெத்தையில் படுத்துக் கம்பளியால் மூடிக் கொண்ட போதும் அவனால் உறங்க முடியவில்லை.

கீழே, மெல்லிய முனகலுடன் தரையில் உருண்டு புரண்டு கொண்டிருந்த உருவம் அவன் மனதை உறுத்தி யதோ?

போர்வையை எறிந்து விட்டு எழுந்தவன் கட்டிலை விட்டுச் சற்று விலகித் தரையில் படுத்துச் சற்றுநேரத்தில் ஒருவாறு உறங்கிப் போனான்.

காலை வேலைக்கென்று 'ரிப்போர்ட்' செய்யச்சென்ற மதுராவைக் கடுமையான முகத்துடன் எதிர் கொண்டாள் அபீதா.

ஒருநொடி ஏற இறங்கப் பார்த்தவளின் உதடுகளில் ஓர் இகழ்ச்சிப் புன்னகை பரவியது.

''ஆமாம், எல்லாம் தீர்ந்து போய்விட்டதா, அல்லது மிச்சம் மீதி இருக்கிறதா?'' என்றாள் கிண்டலாக.

புரியாமல், ''எது!'' என்றாள் மதுரா.

''ஆகாகா! தெரியாததுபோல் என்ன நடிப்பு! அது தான் சொக்குப் பொடி! நேற்றே எல்லாம் காலியாகி விட்டதோ!''

''நான் வேலை தொடங்கு முன் ரிப்போர்ட் செய்ய வந்தேன்.'' என்றாள் மதுரா ஒரு மரத்த குரலில்.

"அதில் ஒன்றும் குறைச்சல் இல்லை" என்று பழிப்புக் காட்டினாள் அபீதா.

நிமிர்ந்து, "ஏன்? வேலையில் குறை இருந்ததா?" என்று நேராகப் பார்த்துக் கேட்டாள் மதுரா.

ஒரு கணம் அபீதாவின் பார்வை தாழ்ந்தது.

உடனேயே, ஒரு சந்திப்பிலேயே வேலை மாறி விட்டதே! 'இவ்வளவு சுறுமையான உடல் உழைப்பை அந்தப்பெண் தாங்கமாட்டாள். அதனால் அடுத்த 'கிரேட்' வேலை செய்யவேண்டும்' என்று சத்யனைப் போலப் பேசிக்காட்டினாள்.

எதற்காக வேலையை மாற்றவேண்டும்?

ஒருவேளை அந்தப் பாறை மனம் கூட இளகி விட்டதோ?

இல்லை என்பது பிறகுதான் புரிந்தது.

அடுத்த 'கிரேட்' வேலை என்ன என்பதை மடமட வேன்று அடுக்கினாள் அபீதா.

"தொந்திரவு செய்யாதே" என்பதைக் குறிக்கும் விளக்கு எரியாத அறைகள் அத்தனைக்கும் காலைக் காபி ட்ரே பிஸ்கட்டுகளுடன் வைத்தாக வேண்டும்.

பூச்சாடிகளில் அழகாகப் பூ அடுக்கவேண்டும்.

படுக்கைகளில் மெத்தை, தலையணை உறை, விரிப்பு எல்லாம் மாற்றிப் புதிது போட்டு வைக்கவேண்டும்.

சலவை அறைக்குத் துணிகளை எடுத்துச்சென்று, சலவையான துணிகளை மீண்டும் உரிய அறைகளில் அடுக்கவேண்டும்...

நாற்பது அறைகளில் இதையெல்லாம் முடிக்க வேண்டும்.

மேல்தளத்தில் முதல் அறைக்குக் காபி ட்ரேயை எடுத்துச் சென்றாள் மதுரா.

அபீதா சொன்னபடியே, கதவை லேசாகத் தட்டி விட்டு, பதில் இல்லாததால் கைப்பிடிக் குமிழை மெல்லத் திருகினாள்.

கதவுதிறந்து கொள்ளவும் ட்ரேயை உள்ளே எடுத்துச் சென்று உள்ளே மேசைமேல் வைத்துவிட்டுத் திரும் பினாள்.

திறந்து கிடந்த அடுத்த கதவின் வழியே சத்யன் தரை யில் கிடப்பதும் வெற்றுக் கட்டிலும் கண்ணில் பட்டன.

தலையணை கூட இல்லாமல் அவன் தரையில் கிடந்து உறங்குவது மனதை உறுத்தியது.

மெல்லச் சென்று கட்டிலில் கிடந்த தலையணைகளில் ஒன்றை எடுத்துக் கொண்டு அவனை நெருங்கினாள்.

தலையின் கீழ் எப்படி வைப்பது? அவன் விழித்து விட்டால் என்ன செய்வது என்று யோசித்த படியே சத்யனை நெருங்கியவள் சட்டென நின்றாள்.

தூக்கம் இன்மையாலோ அல்லது தூக்கம் கலைந்த தாலோ, ரத்தம் போலச் சிவந்திருந்த சத்யனின் விழிகள் அவள் மீதுதான் படிந்திருந்தன.

குழப்பமுற்று ஒரு கணம் நின்றவள், திரும்பிக் கட்டிலின் மீது தலையணையை வீசிவிட்டு அவசரமாக அந்த அறையை விட்டு வெளியேறலானாள்.

"அடிப்படை விதிகள் ஒன்றும் கற்றுக் கொள்ள வில்லையா?" என்று ஒருமாதிரிக் குரலில் வினவினான் அவன்.

பேசாமல் நின்றாள் மதுரா.

"முதலில் அறைக்குள் இருப்பவர்களுக்கு குட்மார்னிங் சொல்லவேண்டும்."என்றான் அவன் பழைய குரலிலேயே.

"கு...குட்மார்னிங்." என்று தடுமாறினாள் அவள்.

"வெரிவெரி பேட் மார்னிங்." என்று பதிலுக்கு வாழ்த்தினான் அவன்.

திடுக்குற்றுத் திரும்பிப் பார்த்தாள் மதுரா.

அவனது சிவந்த விழிகளில் குரூரம் தென்படவும் மறு பேச்சின்றி வேகமாக அறையை விட்டு வெளியேறினாள்.

அவளுக்குத் தீமையை நாடிய அவனது வாழ்த்தில் ஏற்கனவே அவளுடைய இதயம்பதைத்துப் போயிருந்தது.

கண்களில் தென்பட்டகுரூரமோ அவளை கலக்கத்தில் ஆழ்த்தியது.

7

பெரிய வேலையில் இருந்தவளைக் கொண்டுவந்து ஏவல் பணிகளைச் செய்ய வைப்பதோடு சத்யன் திருப்தி அடைவதாக இல்லை.

வாய்ப்பு கிடைத்த போதெல்லாம்—ஏன், வாய்ப்பு களை உருவாக்கிக் கொண்டு கூட மதுராவைக் குதறி எடுக்க முடிவு செய்திருக்கிறான்.

இல்லாவிட்டால் இந்த அடுத்த கிரேடுக்கான வேலை உயர்வு ஏன்?

முதல் நாள் செய்த வேலையில் அவளை அவன் சந்திக்க வாய்ப்பு இல்லை.

அதிலும் தனிமையாய் சந்திக்க அடியோடு வாய்ப் பில்லை.

வாய்ப்பை உண்டுபண்ணவே இந்த வேலை உயர்வு! வேலை காரணமாகத் தன் அறைக்குள் வரவழைத்து வார்த்தைகளால் வதைக்க இருக்கிறான்.

இன்றைய 'வெரிபேட்மார்னிங்'கில் தொடங்கி இன்னும் என்னவெல்லாம் வருமோ?

அவளுடன் பிறந்தபாவம்—மனோகரனும் சேர்ந்து அனுபவிக்கிறான்.

இதிலிருந்து எப்படித்தான் மீள்வது?

ஒன்றும் தோன்றாமல் மனது திகைத்தது.

மனவாட்டத்தை முடிந்த அளவு மறைத்தபடி தொடர்ந்து இயங்கினாள் மதுரா.

'பஞ்சவடி காம்ப்ளக்ஸி'ல் இருந்தே சுற்றுலாவுக்கென மினி பஸ்கள் சில கிளம்பிச் சென்றன.

ஓட்டலுக்கேற்றபடி சகல வசதிகளுடன் கூடியவை.

அவைகளில் செல்வதாக முன்னதாகவே ஏற்பாடு செய்தவர்கள் ஏழரைமணிக்குக் கிளம்பினர்.

அந்த பஸ்கள் சென்றபின் எட்டுமணிக்குமேல் மீண்டும் காபிட்ரேகள் அவசியப்பட்டன.

ஒவ்வொரு அறையாக கொடுத்து வந்தவளுக்குக் கடைசி அறையில் கொஞ்சம் சங்கடமாகிப் போயிற்று.

அங்கே தேனிலவு ஜோடி போலும்.

இருவருக்குமே கட்டிலை விட்டு நகர மனம் இல்லை.

சிவந்தமுகத்துடன் அறையை விட்டு வேகமாக வெளி வந்த போதுதான் ஒன்று உறைத்தது.

அங்கே, சத்யனுடைய கட்டிலில் யாரும் இல்லை.

வேறு யாரும் இருந்ததற்கான அடையாளம் கூட இல்லை.

அவன் மனைவி எங்கே?

நான்கு ஆண்டுகளுக்குமுன், பத்திரிகைகள் அத்தனையிலும் திருமண நன்றி அறிவிப்பின் கீழ் சத்யனோடு ஜோடியாக ஜொலித்தவள்—

பிறகு வெளிநாட்டுப் பயணம் செல்லும் தம்பதியராக மீண்டும் பத்திரிகைகளில் சத்யன் அருகே பளபளத்தவள்—

அந்தக் கல்பனா எங்கே?

எங்கானால் நமக்கென்ன என்ற சலிப்பும் வந்தது.

வெளியூர் போயிருக்கலாம்.

பிள்ளைபெறப் பிறந்த வீடு கூடச் சென்றிருக்கலாம்.

ச்சு!

ஏழாம் எண் அறையில் கேட்ட பத்திரிகைகளைக் கீழ்த்தளம் சென்று எடுத்து வரும் போது இன்னொன்றும் தோன்றியது.

அவள்—கல்பனா முன்னிலையிலும் சத்யன் இதே கொடுமை செய்வானா?

செய்தால் அவளுக்கு சந்தேகம் வராதா?

ஐயம் கொண்டு அவள் வேறு துன்பம் தரத் தொடங்கினால் என்ன ஆகும்?

வாழ்க்கை ஆழ்நரகு ஆகிவிடாதா?

இந்த வேதனை இன்னமும் மூன்று ஆண்டுகள்! மூன்று நெடிய ஆண்டுகள் ஆமை வேகமாய்ச் சென்று முடிந்த நான்கு ஆண்டுகளைக் காட்டிலும் நெடிய ஆண்டுகள்!

கடவுளே!

முன்னிலும் மனம் சோர்ந்து போயிற்று.

அபீதாவின் ஆணைப்படி அறைகளில் உள்ள தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள், சன்னல் திரைகளை எல்லாம் அகற்றிச் சலவை அறையில் ஒப்புவித்தாள்.

அறைகளில் சலவைக் கென்று இருந்த துணிகள் ஏற்கனவே அடையாளக் குறியிட்டு அனுப்பப் பட்டிருந்தன.

ஸ்டோர் அறையிலிருந்து புதிய விரிப்புகள், உறைகள் திரைகளைப் பெற்றுவந்து வேகம் வேகமாக மாட்டினாள்

அதிலும் அவன் அறையில் மின்னல் வேகம்தான்.

அப்படிச் செய்தும், 'சொகுசான மெத்தையைப் பார்த்ததும் படுத்து உறங்கி விட்டு வந்தாயா?'" என்ற கொட்டுச் சொல்லிலிருந்து தப்பமுடியாமல் போயிற்று.

மீண்டும் ஒவ்வொரு குளியல் அறைகளிலும் டவல், ஷாம்பூ பாக்கெட், குட்டி சோப், ஷவர் தொப்பி எல்லாவற்றையும் அழகாக அடுக்கிவிட்டு வந்தாள்,

நீண்ட காம்புகளுடன் கூடிய மலர்க்குவியலையும் ஃபெர்ண் இலைகளையும் காட்டி, "ஒவ்வொரு அறையிலும் சாடிகளில் அழகாக அடுக்கிவை."என்றாள் அபீதா.

முன்தினம் அவள் சுத்தம் செய்தவை, சற்றே மங்கியிருந்தன,

சுத்தம் செய்ய யாரிடம் கொடுப்பது என்று ஒருகணம் தயங்கினாள் மதுரா.

அபீதாவின் முகத்தில் ஓர் ஏளனம் தோன்றவும் எதுவும் பேசாமல் தானே பிராசோ கொண்டு பூச்சாடிகளுக்குப் பளபளப்பு ஏற்றினாள்.

உதட்டைப் பிதுக்கிவிட்டு அபீதா செல்லவும் தன் வேலையைத் தொடங்கினாள்,

ஒவ்வொரு அறையின் வண்ணத்துக்கு, ஏற்ற வகையில் திரைச் சீலைகள், படுக்கைவிரிப்புகள் எல்லாம் இருப்பதை மதுரா ஏற்கனவே கவனித்திருந்தாள்.

அந்த நிறங்களுக்கு ஏற்ற வகையிலேயே ஒவ்வொரு பூச்சாடியிலும் மலர்களையும் இலைகளையும் அடுக்கிக் கொண்டு வைத்தாள்.

ஒருகுவளையில் மண்டியிட்டு அமர்ந்து மலர்களை அடுக்கிக் கொண்டு இருந்தபோது,''ஐ! எவ்வளோ நீளம்'' என்று வியந்த மழலைக் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

ஏற்கனவே மலர்களின் அழகில் அமைதி பெறத் தொடங்கியிருந்த மனது இந்த மழலைக் குரலில் மேலும் உற்சாகம் பெற்றது.

துறு துறு வென்ற பெரிய விழிகளை மலர்த்தியபடி நின்றிருந்த அந்தச் சிறுவன்—அல்லது குழந்தையின் முகம் அவளைக் கவர்ந்தது.

முகம்மலர, ''என்னது, எவ்வளோ நீளம்?'' என்று அவனிடம் வினவினாள் மதுரா.

''இது தான்,'' என்று அவளது நீண்ட தரையைத் தொட்டுக் கொண்டு இருந்த பின்னலைக் காட்டினான் சிறுவன்.

''என் உயரம் இருக்கே!'' ஆச்சரியமாய் அருகே வந்து அளந்து பார்த்தான்.

அந்தக் குஞ்சுவிரல்களின் அபிநயமும் முகமும் கருத்தை ஈர்க்க, அவனை அருகே இழுத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள் மதுரா.

பதிலாக அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கிய சிறுவன், ''நீயாரு? அக்காவா, ஆன்டிட்டியா?'' என்று இளங்குரலில் வினவினான்.

''நான்...நான் மதுரா. நீ...'' என்றவள் சட்டெனச் சுற்றிலும் பார்த்தாள்.

''நீ தனியாகவா வந்தாய்? உன்னோடு யார்...' என்று விழிகளால் துழாவிய வண்ணம் அவள் கேட்கையிலேயே அவசரக் காலடி ஓசை கேட்டது.

''அய்யய்யோ!'' என்று மதுராவின் மடியில் ஒளிந்து கொள்ள முயன்றது குழந்தை.

''சிவாக் கண்ணு, நீ இங்கயா ஒளிந்து கொண்டு இருக்கே.'' என்று கேட்டபடி ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி ஓடிவந்தாள்.

ஆயா என்று நினைத்தாள் மதுரா.

''பார்த்திட்டு இருக்கும்போதே ஓடி வந்து விட்டதும் மா. பாரு, சாப்பாடு அப்படியே இருக்குது.'' என்று தட்டைக் காட்டினாள் அவள்.

''வாய்யா, வந்து சாப்பிடு.'' என்று அன்பாக அழைத்தாள்.

''மா...ட்...டேன்'' என்று அழுத்தம் திருத்தமாக அறிவித்துவிட்டு மதுராவின் மடியில் இன்னமும் அழுந்திக் கொண்டான் அந்த சிவாக்கண்ணு.

அவனை மெல்ல வருடி, ''உன் அப்பா ரொம்பக் குள்ளமா, சிவா?'' என்று வினவினாள் மதுரா.

ஏதோ சொல்ல முயன்ற ஆயாவை மதுரா விழிகளால் அடக்க, ரோஷத்துடன் நிமிர்ந்தான் சிவா.

''எங்கப்பா அவ்வளோ உயர்ரம்!'' என்று மேல் தளத்தைக் காட்டினான்,

''உன் அப்பா இவ்வளோண்டுதான் சாப்பிடுவாராக்கும்?''

''ஊகூம். எங்கப்பா இவ்வளோ சாப்பிடுவார்.'' என்று முடிந்தமட்டும் கைகளை விரித்துக்காட்டியது குழந்தை.

''அதானே பார்த்தேன். உன்அப்பா அவ்வளோ சாப்பிட்டதால்தான் அவ்...வளோ வளர்ந்திருக்கிறார். நீயும் அதே போல வளர வேண்டாமா? சும்மா இவ்வளோ சாப்பிட்டுவிட்டு இவ்வளோண்டுதான் இருக்கப்போகிறாயா?' என மதுரா கேட்கவும் சிறுவன் திகைத்துப்போனான்!

உடனேயே. ''ஆங், கெடையாது கெடையாது. நானும் அவ்வளோ வளருவேன். ஆயா, தா. ஆ.'' என்று வாயைத் திறந்து காட்டினான்.

ஆயா ஊட்ட ஊட்ட மடமட வென்று உண்ணவும் தொடங்கினான்.

''நானுந்தான் சாப்பிட்டாத்தான் வளரலாம், சாப்பிட்டாத்தான் வளரலாம்னு தலைதலையா அடிச்சிக்கிறேன். இப்ப கப்பு கப்புன்னு முழுங்குறதைப்பாரேன்'' என்றபடி ஊட்டினாள் ஆயா.

''இப்போது மெய்யாகவே அவனுக்குப் பசித்திருக்கலாம்.'' என்று ஆயாவுக்கு இதமாகக் கூறிவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள் ஆயா.

''அடேடே, சிவாக்குட்டி, எப்போது வந்தாய்? இப்போது தான் உனவு ஊட்டுகிறாயா, ஆயா? பிள்ளை பசியால் துவண்டு போய்விட்டானே...'' என்று உருகியபடி அபீதா வந்தாள்.

''வழக்கமாவே...'' என்று தொடங்கிய ஆயாவை அலட்சியம் செய்து,'' என்னோடு வருகிறாயா, பேபி? உனக்குக் காட்பரீஸ் தருகிறேன்.'' என்று சிறுவனிடம் சைச்சியம் செய்தாள் அபீதா.

ஒருகணம் காட்பரீஸ் ஆசையால் மயங்கினான் குழந்தை.

பிறகு, ''வேண்டாம், போ. ஆயாவைத் திட்டினா அடிப்பேன்.'' என்று கையை ஓங்கினான்.

சட்டென முகம் கடுக்க, ''பிள்ளை வளர்க்கிற அழகைப்பார்.'' என்று முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டு அகன்றாள் அபீதா.

. ஆயா மீது சலுகையாகச் சாய்ந்து கொண்டு, ''அழாதே, ஆயா. பாட்டிம்மா கிட்டே சொல்லி அவளை அடிச்சிரலாம்.'' என்று தேற்றினான் சிவா.

''என் கண்ணு'' என்று கொஞ்சியபடி மேலே ஊட்டினாள் ஆயா.

சிறுவன் உண்டு முடித்தும், ''என்கூட விளையாட வரியா?'' என்று மதுராவை அழைத்தான்.

''இப்போது வேலை இருக்கிறதே. ஆனால் சாயங்காலம் வருகிறேன். உன் ரூம் எது, கண்ணா, சொல்லு என்றாள் மதுரா.

''ரூம் இல்லை. காட்டேஜ். கடேசி காட்டேஜ். ஆனா இன்னைக்கே வரணும். நாளைக்கி நான் அத்தை வீட்டுக்குப் போறேன்.'' என்றான் சிவா.

சட்டென விழிகளை விரித்து ''அத்தை வீட்டில் ஒரு குட்டிப் பாப்பா...ரொம்பக் குட்டிப் பாப்பா இருக்குது. தெரியுமா? அதுக்கு நடக்கக் கூடவராது. சும்மா இப்படி இப்படித்தான் நடக்கும்.'' என்று கைகளை ஊன்றித் தவழ்ந்து காட்டினான்.

ரசனையுடன் ஆயாவுடன் சேர்ந்து சிரித்தாள் மதுரா.

சிரிப்புச் சத்தம் சற்று அதிகத் தூரத்துக்கு எட்டி விட்டது போலும்.

''சும்மா உட்கார்ந்து கதை பேசிச் சிரிப்பதற்காகவா உனக்குச் சம்பளம் தருகிறார்கள்? எவ்வளவு நேரம் தான் இந்தப் பூக்களைச்சொருகிக்கொண்டு இருப்பாய்?'' என்று அதட்டியபடி அபீதா வந்து விட்டாள்.

அந்த ஆயாவையும் விடவில்லை.

''வம்பளப்பதற்கு யார் கிடைப்பார் என்று வந்தாயா ஆயா? போபோ, உன் வேலையைப்பார். இல்லாவிட்டால் நான் புகார் பண்ணவேண்டியிருக்கும்.'' என்று அவளையும் ஒரு மிரட்டு மிரட்டினாள்.

அபீதாவுக்கு 'வெவ்வெவ்வே' காட்டிய சிறுவனைப் பிடித்துத் தோளில் தூக்கிக் கொண்டு விரைந்து சென்று மறைந்தாள் ஆயா.

யாரோ ஒருவர் வீட்டுக் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் ஆயா இந்த அபீதாவிடம் ஏன் இப்படிப் பயப்படவேண்டும்?

அல்லது ஒட்டலைச் சேர்ந்த 'கிரீஷ்' இவ்வேலை செய்கிறவளோ?

எதுவும் நடவாதது போன்ற பாவனையுடன் மலர் பொதிந்த பூக்குவளைகளை அந்தந்த அறைகளுக்கு எடுத்துச் சொல்லலானாள் மதுரா.

அவளது முதுகை உறுத்தபடி, ''இதை முடித்துவிட்டு விரைவாகவா. சலவைத் துணிகளை அறைகளில் அடுக்க வேண்டும்.'' என்று உத்திரவிட்டாள் அபீதா.

பழையமாதிரியே, உரிய அறைகளில் துணிகளை அடுக்கி, 'வார்ட்ரோ'பில் தொங்க விட்டுவிட்டு வந்தாள்.

சத்யனுடைய ஷர்ட்டை 'ஹாங்'கரில் மாட்டும்போது அவசரத்தில் கை நழுவியது.

அவன் வந்து விடுவானோ என்ற அச்சத்தில் அவசர அவசரமாகச் செய்த வேலை வீணாகி ஒருமுறைக்கு இரு முறையாகச் செய்யும்படி ஆயிற்று.

இவனுடைய முகத்தைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைவில் விழித்ததிலிருந்து குதூகலமாய் இருந்த நாட்கள் அநியாயமாய் நினைவுக்கு வந்து துன்புறுத்தின.

சிரமத்துடன் மனதைச் சமநிலைக்குக் கொண்டு வந்து வேலைகளைத் தொடர்ந்தாள்.

ஆனாலும் இது எவ்வளவு காலம் சாத்தியப்படும்?

வேதனையின் ஊடே மாலையில் வேலை முடிந்ததும் சிவாவின் நினைவில் கொஞ்சம் மகிழ்ச்சி உண்டாற்று.

என்ன அருமையான குழந்தை!

அபீதாவின் காட்பரீசில் கூட மயங்கவில்லையே.

ஆனால் அபீதா ஏன் அவனுக்குக் காட்பரீஸ் கொடுக்கவேண்டும்?

சோழியன் குடுமி சும்மா கூட ஆடுமா?

அவள் எப்படியோ போகட்டும்; சிவாவுடன் சற்று நேரத்தை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

கடைசி காட்டேஜ் என்றானே.

பெரிய கட்டிடத்திலிருந்து அதற்குச் செல்ல குறுக்காக வேறு வழி இருந்தது.

எனவே திரும்பி வரும் போது தான் மனோகரனைத் தேடவேண்டும் என்று எண்ணியபடி வேகமாக நடந்தாள் மதுரா.

தட்டியும் மூங்கிலுமாக வெளியே குடிசை போன்று தோற்றமளித்த போதும் உள்ளே வெகு அழகாக இருந்தது.

வாரந்தா, ஹால், படுக்கையறை, குளியலறை என்று குட்டி வீடு தான்.

அங்கே, மதியம் கண்ட ஆயா, சிறுவனோடு இன்னொரு அழகிய பெண்ணும் இருந்தாள்.

அவள் தான் சிவாவுடைய அத்தை என்று தெரிய வந்தது.

அந்த அத்தை மதுராவைப் பார்த்ததும் ஏனோ சற்று அதிசயப் பட்டாற் போலத் தோன்றியது.

உடனே அதை மறைத்துக் கொண்டு புன்னகை தவழ வந்தவளை வரவேற்றாள்.

"என் பெயர் நித்யா. சிவாவின் அத்தை, நீங்கள் தான் மதுராவா? வந்ததிலிருந்து அவனுக்கு உங்கள் ஜபம் தான்." என்று முறுவல் செய்தாள்.

"நாளை உங்கள் வீட்டுக்கு வரப்போகிறானாமே." என்று பதிலாகப் புன்னகை செய்தாள் மதுரா.

"ஆமாம். அம்மா வெளிநாடு போய் விட்டதால் இங்கே தனியாக இருக்க வேண்டாம் என்று அழைத்துப் போகிறேன்... வந்து, உங்களுக்குப் பூக்கள் என்றால் பிரியம் அதிகமா?" என்று விசாரித்தாள் நித்யா.

"ஆமாம்..... ஏன் கேட்கிறீர்கள்?"

"இல்லை, பூச்சாடிகளில் பூக்களை அடுக்கிக் கொண்டு இருந்த போது உங்களைப் பார்த்தார்களாமே, சிவாவும் ஆயாவும்."

சும்மாப் பொழுது போக்காக அந்தவேலையை அவள் எடுத்துச் செய்ததாக நித்யா நினைப்பது மதுராவுக்குப் புரிந்தது.

ஒரு கண நேரத் தயக்கத்துக்குப் பிறகு "நான் இங்கே வேலை செய்கிறேன். பூச்சாடிகளில் பூ அடுக்கி வைப்பது என் வேலைகளில் ஒன்று தான்." என்றாள்.

"ஓ!"

வியப்புடன் பார்த்து விட்டுத் "தமிழ் நாட்டில் வேலையே கிடைக்கவில்லையா? உங்களைப் பார்த்தால் படித்தவர் போலத் தெரிகிறதே. இங்கேயே கூட 'க்ளெரிகல்' வேலை ஏதாவது கிடைக்குமே. ஏன் இந்த வேலை செய்கிறீர்கள்? சம்பளம் கூடக் குறைவாக இருக்குமே." என்று அனுதாபம் காட்டி விசாரித்தாள் மற்றவள்.

"இல்லை... இங்கேயே தங்கியிருக்கிறேன். பிடித்தம் போக ஏழு நூறு வருகிறது." என்றாள் மதுரா.

மீண்டும் நித்யாவின் முகத்தில் வியப்பு தோன்றியது.

"உங்களை இந்த வேலைக்குத் தேர்ந்தெடுத்தது யார்? ... ஏன் கேட்கிறேன் என்றால் எனக்கு என்னவோ பெரிய வேலை செய்யும் தகுதி உங்களிடம் இருப்பது போலத் தெரிகிறது..." என்று முறுவல் செய்து விசாரித்தாள் நித்யா.

"ஆனால் இந்த ஓட்டல் எம்.டிக்கு அப்படித் தோன்றவில்லையே." என்று பதில் கூறித் தானும் லேசாக முறுவல் செய்தாள் மதுரா.

''ஓ!'' என்ற நித்யாவிடம் ஆச்சரியம் வெளிப்படையாகவே தெரிந்தது.

ஒரு பெரிய ஓட்டலின் எம். டி. க்கு யார் யாருக்கு என்ன வேலை கொடுப்பது என்று தெரியவில்லையே என்று வந்த வியப்பு என்று நினைத்தாள் மதுரா.

'ஆனால் நல்ல சம்பளம் என்று நீங்களும் விரும்பித் தானே சேர்ந்திருக்கிறீர்கள்?''என்று மேலும் துளைத்தாள் மற்றவள்.

''இல்...'' என்று சொல்லத் தொடங்கி விட்ட மதுரா சட்டென உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானாள்.

அவளுடைய குனிந்த தலையையும் வாடிய முகத்தையும் ஒரு கணம் கூர்ந்து பார்த்தாள் நித்யா.

திரும்பி மருமகனை அழைத்தாள்.

''சிவுக்கண்ணு, இதோ, இங்கே உன் ஃபிரண்டு வந்திருக்கும் போது அங்கே என்னம்மா செய்கிறாய்?'' என்று குரல் கொடுத்தாள்.

''அவங்களுக்குத்தான் ஐஸ்கிரீம் கொண்டு வாரேன்.'' என்று ஒரே தட்டில் மூன்று பெரிய ஐஸ்கிரீம் கிண்ணங்களை ஆயா தூக்கிவர, தான்தான் அதைத் தாங்கி வருவது போலப் பாவனையுடன் தட்டைத் தொட்டுக் கொண்டு உடன் வந்தான் சிவா.

சிவாவும் மதுராவும் பிரியத்துடன் பழகுவதைக் குறு குறுப்போடு பார்த்துக் கொண்டு இருந்தாள் நித்யா,

8

நித்யாவுடனும் சிவாவுடனும் பேசிக் கொண்டு இருப்பது இதமாக இருந்த போதிலும் மதுரா அதிக நேரம் தங்கவில்லை.

திரும்பி வரும் வழியில் மனோகரனைப் பார்க்க வேண்டும்; அதன் பிறகு வந்து குளித்து, உடைகளைத் துவைத்து... என்று சொந்த வேலைகளும் இருந்தன.

எனவே விரைவாகவே விடை பெற எழுந்து விட்டாள். ''நாளைக் காலையில் என்றால் எனக்கு வேலை நேரமாக இருக்கும். எனவே இப்போதே குட்பை.'' என்று கூறிப் புன்னகை செய்தாள்.

''இந்த 'குட்பை'யைக் சற்று நேரம் கழித்துச் சொல்லுங்கள். இப்போது நானும் உங்களோடு கொஞ்ச தூரம் வரப்போகிறேன்.'' என்று நித்யாவும் எழுந்தாள்.

''அத்தை, நான்...? உங்களுக்கும் ஆண்ட்டிக்கும் துணையா நானும் வரட்டுமா?'' என்று பெரிய மனிதன் போல வினவினான் சிவா.

''ஊகூம். பாப்பா விழித்துக்கொண்டால் துணைக்கு யாரும் இல்லாவிட்டடால் அழமாட்டாளா? நீ பாப்பாவைப் பார்த்துக் கொள். நான் சீக்கிரம் வந்துவிடுவேன்.'' என்றாள் நித்யா.

பெரிய பொறுப்பை ஏற்கிறவன் போலச், ''சரி, அத்தை. குட்பை ஆண்ட்டி.'' என்று கூறிவிட்டுப் பாப்பாவின் தொட்டில் அருகே போய் அமர்ந்தான் சிவா.

கலனித்துக் கொள்ளுமாறு ஆயாவிடம் கண்ணைக் காட்டிவிட்டு மதுராவுடன் நடந்தாள் நித்யா.

''பெரிய்ய ஆண்பிள்ளை. துணைக்கு வருகிறானாம்.'' என்று வெளியே வந்ததும் சொல்லிச் சிரித்தாள்.

இருவருமாகச் சிரித்தபடி நடந்தனர்.

ஒரு புதர் வேலியைத் தாண்டிச் சென்ற பிறகு இருந்த ஒரு அகன்ற கட்டிட வாயிலில் நின்று 'தாமஸ் தாத்தா' என்று அழைத்தாள் நித்யா.

"வர்றேம்மா." என்ற குரல் எங்கிருந்தோ கேட்டது.

அந்தத் தாத்தா வருவதற்காகக் காத்திருந்த நேரத்தில் நித்யா விளக்கினாள். இது 'இன்டோர்' நீச்சல் குளம். அங்கே இங்கே சில சமயம் குளிராக இருக்கிறதல்லவா? அதனால் வெது வெதுப்பு பிடிக்கிறவர்கள் குளிப்பதற்காக இது. அங்கே முன்புறத்தில் வலது புறம் ஓரமாய் 'ஓப்பனாய்' ஒன்று இருக்கிறது.

இங்கே அடிக்கடி வந்து தங்குகிறவள் போலும் என்று நினைத்தாள் மதுரா.

எண்ணியதைக் கேட்கத் தொடங்குமுன் அந்தத் 'தாமஸ் தாத்தா' வந்து சேர்ந்தார்.

வயது எழுபதுக்கும் மேல் இருக்கும்.

தலைமயிர் பஞ்சுப் பொதி போல் நிறத்தில் மட்டு மல்லாமல் அடர்த்தியாயும் இருந்தது.

ஆனால் நல்ல ஆரோக்கியமாகவே தோன்றினார்.

தொள தொளப்பாய் ஒரு பான்டும், கோட்டும் அணிந்திருந்தார்.

"நித்யாம்மா, இந்தா." என்று ஓர் அழகிய ஃபான்டா கலர் ரோஜாப்பூவை நித்யாவிடம் நீட்டினார்.

மதுராவைக் கண்டதும், அடேடே இன்னொரு சீமாட்டியா? நான் போய் இன்னொரு ரோஸ் எடுத்து..." எனுமுன் "பரவாயில்லை பரவாயில்லை." என்று இடை மறித்தாள் மதுரா.

"நான் இதையே மதுராவுக்குக் கொடுத்துவிடுகிறேன் தாமஸ். என் சேலை கலருக்கு இது பொருத்தமாய் இராது பார்." என்று ரோஜாவை மதுராவிடம் கொடுத்தாள் நித்யா.

சற்றுத் தயங்கிவிட்டு நித்யா வற்புறுத்தவும் வாங்கிக் கொண்டாள் மதுரா.

தாமசிடம் திரும்பி அறிமுகத்தைத் தொடங்கினாள் நித்யா.

"தாத்தா, இவர்கள் பெயர் மதுரா. இங்கேதான் 'மெயின் பில்டிங்'கில் வேலை செய்கிறார்களாம். நம்ம சிவாவுக்கு ரொம்பவும் ஃபிரண்டு. அதனால் நீ கொஞ்சம் நன்றாக இவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும்." என்று கண்களை அகல விரித்துத் தாமசை உற்றுப் பார்த்தாள்.

தாமசும் விழிகள் விரிய அவளைப் பார்த்துவிட்டு அவசரமாகத் தலையாட்டினார்.

"ஓ! நல்லாவே கவனித்துக் விடுவோம். என்ன பேரு மதுராவா? நல்ல பேருதான், தினத்துக்கும் என்ன கலர்ச் சேலைகட்டப் போகிறென்று சொல்லி விடும்மா. அதற்குச் சரியாக ரோஜாப்பூ தந்து விடுகிறேன்." என்றார் கிழவர் உற்சாகமாய்.

"நன்றி தாத்தா." என்ற மதுரா லேசாகத்தலையைச் சரித்து "நான் பச்சைக் கலர் சேலை கட்டினால்?... என்று குறும்பாகக் கேட்டாள்.

"உனக்குத் தாமஸ் பற்றித் தெரியாது. அவருடைய தோட்டத்தில் பச்சைக் கலர் ரோஜாகூட இருக்கிறது." என்று சிரித்தார்ள் நித்யா.

"நிஜம்!?"

''நூறு சதவீதம் நிஜம்.'' என்று அடித்துசொன்னாள் நித்யா.

''எல்லாம் பெரிய துரையுடைய அருள்தானேம்மா'' என்று கிழவர் உருகினார்.

''ஒருநாள் நல்ல வெளிச்சத்தில் உங்கள்தோட்டத்தை நான் பார்க்க வேண்டும் தாத்தா.'' என்றாள் மதுரா.

''ம்... எப்போ வேண்டுமானாலும் வா. நாளைக்கே வருவதானாலும் சரிதான். ஆனால் அரைமணி நேரம் முன்னதாகச் சொல்லிவிட வேணும். இங்கே நீச்சல் குளத்துக்குப்பார்த்தி ஆள்வைத்து வரவேணும்இல்லையா.''

''வேலையும் செய்கிறீர்களா?'' என்று சிறு வியப் புடனே வினவினாள் மதுரா.

''சும்மா மேற்பார்வைதாம்மா. உன்னைப் போலச் சிறுசுகள் குளிக்க வருவாங்க. என்னைப் போலக் கிழடு கட்டை கிடப்பதுதானே நல்லது. ஆனால் சரியா நீந்தத் தெரியாதவங்களுக்கு உதவ வேறே ஆளும் உண்டு... உனக்கு நீந்தத் தெரியுமில்லையா, அப்பப்போ வந்து நீந் தேன். ஓகோ, இங்கே வேலை செய்கிறதாகச் சொன்னா யில்லையா, நித்யாம்மா. வேலை முடிந்த பிறகு வந்து நீந்தும்மா.'' என்று அன்பாக அழைத்தான் தாமஸ்.

மதுரா நீந்தத் தெரிந்தவள். அத்தோடு நீந்துவதில் ஆசையும் உடையவள்.

ஆனால் இன்றிருக்கும் நிலையில் தப்புத் தவறாக ஏதும் செய்து மாட்டிக் கொள்ளவும் அவளுக்கு விருப்பம் இல்லை.

''இது...இந்த நீச்சல் குளமெல்லாம் இங்கே வந்து தங்குகிறவர்களின் உல்லாசத்துக்காக ஏற்படுத்தப் பட்டது. இதில் இங்கே வேலை செய்கிறவள் நீந்தி விளை

யாடுவது என்றால் சரியாகப்படவில்லையே.'' என்றாள் மெதுவாக.

''நானே—இங்கே எல்லோரையும்விட மூத்தவன். நானே சொல்லுகிறபோது வேறு யார் அதைச் சரியில்லை என்று சொல்வார்கள்? சின்னதுரைகூட என்வார்த்தைக்கு மாறு சொல்ல மாட்டார். அதற்கு மேல் யார்? நீ தைரிய மாய் வாம்மா. யாரேனும் கேட்டால் தாமஸ் தாத்தா என்று சொல்லு. எல்லோர் வாயும் மூடிப் போய்விடும்.'' என்றார் தாமஸ் உரத்த குரலில்.

''கரெக்ட் தாத்தா சொல்வது போலச் செய்யுங்கள், மதுரா.'' என்று தானும் உற்சாக மூட்டினாள் நித்யா.

''சரி வருகிறேன்'' என்று சம்மதித்துப் பின் விடை பெற்றாள் மதுரா.

தாமஸ் உள்ளே சென்றதும் ''முப்பது ஆண்டுகளாக இங்கேயே இருக்கிறவன் தாமஸ். முதலில் 'வாட்ச்மேன்' ஆக இருந்தான், ஓய்வு பெற வேண்டிய வயதில் ரொம்ப வும் மனம் வேதனைப் பட்டானாம். அதனால் ஓட்டலுக் கென்று உள்ள தோட்டத்தை இவன் பொறுப்பில் விட் டார்கள்...இந்த ஓட்டல் உரிமையாளர். அதிலிருந்து இவனுக்கு ரொம்ப சந்தோஷம். சும்மா வானும் அங்கே இங்கே மீசையைத் தடவிக் கொண்டு அலைவான். இந்த நீச்சல் குளம் கட்டியதிலிருந்து இங்கேயே இருக்கிறான். நல்லவன். நம்பிக்கைக்கு உரியவன்.'' என்றாள் நித்யா.

விடைபெறும்போது, ''தாமசை நம்பி எதையும் கேட் கலாம்; எதையும் சொல்லலாம், மதுரா.'' என்று மீண்டும் கூறிச் சென்றாள்.

திரும்பி நடந்த மதுராவின் மனது அவள் பேச்சை அசைபோட்டது.

தாமசை நம்பிக் கேட்பது நடக்கக் கூடியதாக இருக்கலாம்.

ஆனால் எதையும் சொல்வது எப்படி சாத்தியம்?

நாலு ஆண்டுகளாக அவள் ஒருத்தியின் நெஞ்சுக் கூட்டினுள் பூட்டி வைத்தவைகளை யாரிடம் என்றாலும் தான் சொல்வது என்பது எப்படி சாத்தியம்?

எவனை மையமாகக் கொண்டு அவளுடைய இதயம் இயங்கியதோ அவனிடம் சொல்ல வழியில்லையே.

மனோகரன் உடல் சோர்ந்து போயிருந்தான்.

ஆனால், ''உன் துணிகளையும் தருகிறாயா, மனோ? சேர்த்துத் துவைத்து விடுகிறேன்.'' என்று அவள் கேட்ட போது ஒரேயடியாக மறுத்துவிட்டான்.

''என்னாலும் துவைக்க முடியும், அக்கா. ஏற்கனவே என்னால் நீ படுகிற துன்பம் போதாதா?'' என்றான் வேகத்துடன்.

''இன்று வேலை, மனோ...''

''எந்த வேலையானால் என்னக்கா? நீ சென்னையில் செய்த வேலைக்கு எந்த அளவுக்கு எட்டிவரும்?'' என்றான் அவன் கசப்பும் வேதனையுமாக.

மீண்டும் மீண்டும் தம்பி தன்னைத்தானே நோவது— அதுவும் காரணமற்று நோவது மதுராவுக்கு வேதனையாக இருந்தது.

தம்பியின் துன்பத்தைத் தீர்க்கும் வழி அறியாததால் வேறு வழியில் அவனது மன வேதையைக் குறைக்க முயன்றாள்.

இனி ஒரு தரம் இதுபோலப் பேசினால் அவனைப் பார்க்கக்கூட வரப்போவது இல்லை என்று மிரட்டினாள்.

வளர்ந்த காலத்தில் எல்லாம் சேர்ந்து சிரித்து விளையாடிவிட்டு இப்போது துன்பம் வரும் நேரத்தில் சுயநலவாதியாக அவளை விலக்கப் பார்க்கிறானா என்று அதட்டிக் கேட்டாள்.

அவன் முகம் தெளியாததுகண்டு, ''தவறு செய்தது தருமபுத்திரர் மட்டும்தான், மனோ. ஆனால் எந்தத் தம்பியேனும் அவரை விட்டு விலகிப் போனார்களா? அண்ணன் தம்பி, அக்கா தங்கையோடு பிறப்பது எதற்கு? களிப்பை மட்டும் பகிர்ந்து, கொள்ளவா? கஷ்டத்தையும் தான்...இப்போது எனக்கு ஒரு துன்பம் என்று வந்தால் நீ விட்டுவிட்டு ஓடி விடுவாயாடா?'' என்று தொண்டை அடைக்கக் கேட்டாள்.

''சீச்சீ. என்ன வார்த்தை சொன்னாய் அக்கா'' என்றான் மனோகரன் கோபமாக.

உள்ளூர ஆறுதல் அடைந்தவளாய் ''பின் என்ன தம்பி. இந்தமாதிரி மனதைக் குழப்பிக் கொள்வதை விடு'' என்று முடித்தாள் மதுரா.

அவனிடம் அடித்துப் பேசி முடித்து விட்டபோதும் தனக்குள் மிகவும் வேதனைப்பட்டாள் மதுரா.

தன்னால் அல்லவா தம்பிக்கு இந்த உடல் வேதனையோடு மனத்துன்பமும்.

மறுநாள் பழையபடி அந்த அறையில் சன்னல் திரைகளை மாற்றும்போது காட்டேஜ் பக்கமாக விழிகளால் துழாவினாள்.

ஒரு காட்டேஜைச் சுற்றிப் பெருக்கிக் கொண்டு வந்தான் அவன்.

அங்கங்கே இருந்தவர்கள் கண்களைச் சந்திப்பதைத் தவிர்த்துத் தரையிலேயே பார்வையைப் பதித்து அவன் வேலை செய்த விதம் அவளை வெகுவாக வாட்டியது.

உள்ளூர ஒரு தீர்மானம் செய்து கொண்டவளாய் சத்யனின் அறையை நாடிச் சென்றாள்.

கீழே செல்லத் தயாராகிக் கொண்டு இருந்த அவன் அவளைக் கண்டதும் புருவங்களை உயர்த்தினான்.

''எனக்குத்தானே தண்டனை? தம்பியை ஏன் வாட்டு கிறீர்கள்? அவனை விட்டுவிடுங்கள்... தயவு செய்து...'' என்று பீடிகையின்றிப் போட்டு உடைத்தாள் மதுரா.

''ஏன், அவன் தப்பே செய்யவில்லையா?'' என்று ஏளனமாகக் கேட்டான் சத்யன்.

''நீங்கள் பணத்தை நீட்டாவிட்டால் அவள் தப்பு செய்யவே வாய்ப்பில்லையே" என்று ஆத்திரத்துடன் கேட்டாள் அவள்.

மனோகரனைக் கெடுப்பதும் கெடுத்துவிட்டுக் கேலி வேறா என்று வந்தது அவளுக்கு.

''ஓகோ, அப்படியா? ஆனால் பணத்தை நீட்டத் தானே என்னால் முடியும்? அதை வாங்கிக் கொண்டதும் கண்டபடி செலவு செய்ததும் அவனுடைய குற்றம் இல்லையா?''

''.....''

''ஓசியில் கிடைப்பது உலகத்தில் ஒன்றும் இல்லை, தப்பு செய்தால் தண்டனையும் அனுபவித்தாக வேண்டும் என்றெல்லாம் உணர்ந்துகொள்ள உன் சகோரனுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. அதைக் கெடுக்க விரும்பு கிறாயா? அவன் ஆண்பிள்ளையாவது பிடிக்கவில்லையா?''

அவன் சொல்வது சரிதான்.

மனோகரன் தன் வேலையையோ வலியையோ பெரிது படுத்தவில்லை.

தன் தப்புக்கு ஏற்ற தண்டனை என்று ஏற்றுக் கொண்டும் இருக்கிறான்.

அவன் சொன்னது போல அவன் ஆண்பிள்ளையாக ஆகிக் கொண்டுதான் இருக்கிறான்.

ஆனாலும்.....

நியாய அநியாயத்துக்கும் பாசத்துக்கும் பொருத்தம் உண்டா. என்ன?

விழிகளில் நீர்மல்க சத்யனை ஏறிட்டுப் பார்த்து விட்டுத் திரும்பி நடந்தாள் மதுரா.

அன்று மாலையில் சந்தித்தபோது மனோகரன் மிகவும் பரபரப்புற்று இருந்தான்.

''அக்கா, இனி நீ இங்கே இருப்பது சரியாகப் பட வில்லை. என்ன வேண்டுமானாலும் செய்து கொள் ளட்டும் என்று கிளம்பிவிட வேண்டியதுதான்." என்றான் படபடப்புடன்.

''ஏன்?''

''என்னை வேறே இடத்துக்கு—ஏதோ ஹில் காம்ப்ளக் சாம். அங்கே மாற்றி விட்டார்கள். உன்னிடமிருந்து என்னைப் பிரிக்கிறார்கள் அக்கா. ஏன்? ஏன்? உன்னைத் தனியே இங்கே தவிக்க விட்டுட்டு நான் எங்கும் செல்லப் போவது இல்லை. முடியாது.''

கண்ணெதிரே தம்பி தன் உடல் நோக வேலை செய் வதைப் பார்க்கப் பார்க்க, அவள் திரும்பவும் தன்னைத் தொல்லை செய்யக்கூடும் என்று சத்யன் எண்ணுகிறான் என்று மதுராவுக்குத் தோன்றியது.

அல்லது எப்படியும் மறுப்பு வரும்; அதைச் சாக்கிட்டு வேறு ஏதேனும் கஷ்டம் கொடுக்கலாம் என்று நினைக் கிறானோ?

எதுவென்று யாருக்குத் தெரியும்?

எதற்கும் ஒதுங்கிப் போவது நலம் என்ற எண்ணத்தில், ''போனால் என்ன, மனோ?'' என்று வினவினாள் அவள்.

''யோசித்துத்தான் பேசுகிறாயா, அக்கா? அந்த எம். டி. பக்கா அயோக்கியன். என்னை அகற்றி விட்டு உன்னிடம் வாலாட்டப் பார்க்கிறான்.'' என்றான் மனோகரன்.

''சேச்சே. அவர் நல்லவர்'' என்றாள் மதுரா தன்னையும் அறியாமல்.

உடனேயே, ''அவர்...அந்த வகையில் நல்லவர் என்று தான் எல்லோரும்சொல்கிறார்கள்.....இங்கேஇந்த நீச்சல் குளம் பார்க்கிற தாத்தா ஒருவர் இருக்கிறார். இந்த எம். டியின் அப்பா காலத்தில் இருந்து குடும்பத்தோடு பழகுகிறவராம். அவர்கூட அப்படித்தான் சொல்கிறார். நீ வேண்டுமானால் அவரிடமே கேட்டுப்பார்'' என்று தாமசிடம் மனோகரனை அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தினாள்.

அவர்கள் இருவரையும் பேசவிட்டுவிட்டு உள்ளே சென்று சுற்றிப் பார்த்துவிட்டு வந்தாள்.

அதற்குள் பழைய காவலாளியின் பேச்சில் சமாதானம் அடைந்திருந்தான் மனோகரன்.

''அக்காவைப் பார்த்துக் கொள்ளுங்கள் தாத்தா'' என்று தாமசிடம் கூறிவிட்டுக் கிளம்பினான்.

''இன்றிரவே செல்ல வேண்டுமாம், அக்கா. ஜாக்கிரதையாக இரு'' என்று தமக்கையிடமும் கூறி விடைபெற்று சென்றான்.

யோசனையோடு நின்றவளிடம், ''நீந்த வரலியா, மதுராம்மா?'' என்று வினவினான் தாமஸ்.

தண்ணீரில் நீந்தித் துளைவது என்றால் மதுராவுக்கு மிகவும் விருப்பம்தான். ஆனாலும் மெதுவே தலையசைத்தாள்.

''நீச்சல் குளத்துத் தண்ணீர் வெதுவெதுவென்று சுகமாக இருக்கும். உடம்பு பிடித்துவிட்டாற்போல அலுப்பெல்லாம் தீர்ந்து நல்லாத் தூக்கம் வரும்''. என்று ஆசை காட்டினான் கிழவன்.

குனிந்து சேலையைப் பார்த்தாள் மதுரா.

''ம்...அதெல்லாம் ஒன்றுமில்லைம்மா. உள்ளே உடை மாற்றுகிற அறையில் அலமாரியிலே பார். நீச்சல் உடைங்க கூட இருக்கும். குளித்து விட்டுப் பின்னாடி இருக்கிற ஷவர் ரூம்களில் உடம்பு சுழுவி விட்டுப் பிறகு திரும்ப மாற்றிக் கொள்ளு.''

''யாரேனும் வருவார்களோ என்று இருக்கிறது, தாத்தா.'' என்று மேலும் தயங்கினாள் மதுரா.

''ம்... இவ்வளவு நேரத்துக்கு மேலே யாரும் வர மாட்டாங்க தாயி.''

''பின்னே, பூட்டிக் கொண்டு போவது தானே.'' என்றாள் அவள்.

''அதெப்ப்டி முடியும்? எப்பவாச்சும் சின்... சி... சில சமயம் யாராச்சும் அதிசயமா வந்தாலும் வரலாமில்ல? ''அ... அதுக்காக யோசிக்காதம்மா. அப்படியே யாரும் வந்தால் ஒரு குரல் கொடுக்கிறேன். நீ வெளியேறி விடு.'' என்று வாயில் புறத்து ஸ்டூலில் அமர்ந்தான் தாமஸ்.

அன்றிலிருந்து இரவு நீச்சல் குளத்தில் குளியல் வழக்க மாயிற்று மதுராவுக்கு.

சில தினங்களில் இதற்கும் ஒரு முடிவு வந்தது.

வழக்கமாக மதுரா குளிக்கையில் உள் விளக்குகளை அணைத்து விடுவாள்.

மேலே 'ட்ரான்ஸ் பரன்ட்' ஓடுகள் மூலமாய் ஊடுருவும் நிலவொளி மட்டுமே இருக்கும்.

அன்றும் அப்படித்தான்.

நீந்துவதும் சின்ன அசைவுகளுடன் மிதப்பதுமாக நீரில் விளையாடிக் கொண்டு இருந்தவளின் பார்வையில், குளத்தைச் சுற்றிலும் இருந்த செடிகளின் பின்னே சிறு வட்டவடிவமான ஒளி விழுந்ததும் திடுக்கிட்டு போனாள்.

பிறகு அது எரிந்து கொண்டிருந்த ஒரு சிகரட்டின் தீ என்பது புரிந்ததும் திகைத்தாள்.

தாமசை ஏமாற்றி யாரேனும் உள்ளே வர முடியுமா?

அல்லது முன்னதாகவே யாரேனும் வந்து ஒளிந்து கொண்டு இருக்கிறார்களா?

ஏன்?

இந்த அரை வெளிச்சத்தில் எந்த அளவுக்கு அவளுடைய உடல் தெரிந்திருக்கும்?

சட்டென நீரினுள் மூழ்கியவள் சிகரட் வெளிச்சம் தெரிந்த திசைக்கு எதிர்புறமாக மூழ்கியபடியே நீந்திச் சென்றாள்.

முடிந்த அளவு ஒசையின்றிக் கரை ஏறியவள் அவசர அவசரமாக இரண்டு எட்டு எடுத்து வைக்கு முன் இரு வலியகரங்களின் இரும்புப் பிடியில் சிக்கிக் கொண்டாள்.

9

நெஞ்சு தடதடத்த போதும் அச்சத்தை மீறிப் பொங்கிய ஆத்திரத்தில் போராடத் தொடங்கிய மதுரா சட்டெனத் தொய்ந்தாள்.

அத்துமீறி என்றாலும் அணைத்தவன் சத்யன் அல்லவா?

மெதுவாக அவன் கைகளை விலக்க முயன்றபடி, ''விடுங்கள், சத்யன்.'' என்றாள் மெல்லிய குரலில்.

அவன் அவளை மேலும் இறுக அணைத்தபடி, ''ஏன்?'' என்றான் ஒற்றைச் சொல்லாக.

புரியாமல், ''என்னது, ஏன்?'' என்று திகைப்புடன் வினவினாள் மதுரா.

''விடச் சொன்னாயே, ஏன் என்று கேட்டேன்.'' என்றபடி ஒரு கரத்தால் அவளது தோளை வருடினான் அவன்.

மீண்டும் தலை தூக்கிய சினத்துடன், ''நீங்கள் ஒரு குடும்பத் தலைவர். நான் வேற்றுப் பெண். ஆகவே இது தப்பு. அதனால்தான் விடவேண்டும்.'' என்று வேகத்துடன் மொழிந்தபடி அவன் கையை இறுகப் பற்றித் தடுத்தாள் மதுரா.

''தப்பு, சரி பற்றி எனக்கு அக்கறை இல்லை.'' என்று கூறி மீண்டும் அவளைத் திகைக்க வைத்துவிட்டு அவளுடைய தோள் வளைவில் முகம் புதைத்தான் அவன்.

செயலற்றவளாய், ''நீங்கள்...நீங்கள் மாறிவிட்டீர்களே, சத்யன்.'' என்று வேதனையோடு கூறினாள் மதுரா.

சட்டென்றத் தலைநிமிர்ந்து அவளைக் கைப்பிடியில் எதிரே நிறுத்திப் பார்த்தவன், ''ஆனால் நீ மாறவே இல்லை.'' என்று கூறிக் கசப்புடன் நகைத்தான்.

''அந்த அழகு கொஞ்சம் கூட மாறவே இல்லை. ஆனால் அந்த பயங்கரக் கவர்ச்சி மட்டும் பத்து மடங்கு ஏறியிருக்கிறது. நல்ல பாம்பினுடையதுபோல. அதே விஷக் கவர்ச்சி.''

வேதனையோடு தலை குலிந்தாள் மதுரா.

ஆனால் அவளுடைய கைகள் அத்துமீறவும் முழு பலத்துடன் அவனி மிருந்து விடுபட முயன்றாள்.

அவளை எளிதாக அடக்கியபடி, ''பார், முன்னெல் லாம் உன்னை நான் இப்படித் தொட்டது உண்டா? அப்போது...பின்னால் என் உரிமை ஆகப் போகிறது என்ற நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையில் காத்திருப்பது கூட சுகம் என்று எண்ணியிருந்தேன். அந்த நம்பிக்கையை அடியோடு நசுக்கி நாசமாக்கியவள் நீயேதானே. இப்போது...பின்னொருநாள் கிடைக்கும்என்ற 'காரண்டி' கூட இல்லாதபோது கையில் கிடைத்ததை நான் ஏன் விட வேண்டும்? சொல்லு.'' என்று கேட்டான் அவன்.

அவன் பேச்சில் இருந்த கோணல் நியாயத்துக்கு அவளால் பதிலிறுக்க முடியவில்லை.

அவன் பேசிய விதமும் அவனது முறையற்ற செயலும் அவன் குடித்திருப்பானோ என்ற எண்ணத்தைத் தோற்று வித்தது.

தாமசை அடித்துகிடித்துப் போட்டுவிட்டு வந்திருப் பானோ?

வெளியே தெரிந்தால் அவன் கதி என்ன ஆகும் என்று கலக்கம் உண்டாயிற்று அவளுக்கு.

கூடவே அவன் கைகளில் நெகிழத் தொடங்கிய உடம்பு மேலும் திகிலூட்டியது.

பெருமுயற்சி செய்து மனதையும் உடம்பையும் கட்டுப் படுத்தி அவனோடு போராடத் தொடங்கியபோது, ''துரை...'' என்று எங்கோ தாமசின் குரல் அழைத்தது.

''துரை...சின்னதுரை...'' அவன் குரல் நெருங்கியது.

ஒரு கணம் அசைவற்று நின்றான் சத்யன்.

மறுகணம் எலும்புகள் எல்லாம் நொறுங்கிவிடும் போல அவளை இறுக அணைத்தவன் உடனேயே விலகி வெளியே செல்லலானான்.

''உள்ளே பெண்கள் இருப்பதைச் சொல்வதற் கென்ன?'' என்று தாமசை அதட்டியபடி அவன் வேகமாக வெளியே செல்வதும், ''துரை, உங்க சிகரெட்டு.'' என்று பின்னோடு தாமஸ் ஓடுவதும் கேட்டது.

தாமசை சிகரட் எடுத்துவரச் சொல்லி அனுப்பி விட்டு உள்ளே வந்திருக்கிறான்!

சிகரட்டோடு தாமஸ் திரும்பி வருவான் என்பது நன்றாகவே தெரியும்.

பின் ஏன் அவளை அப்படி அணைத்தான்.

''நான் தொட்டால் போதும்; நீ மயங்கி விடுவாய் என்று அவளுடைய பலவீனத்தை அவளுக்கு எடுத்துக் காட்டவா?

அல்லது, இது என் இடம். இங்கே நான் எது வேண்டு மானாலும் செய்வேன். என்று அவளை மிரட்டுகிறானா?

அல்லது இதற்காகத்தான் அவளை இங்கே கொணர்ந் தானா?

கட்டிய மனைவிக்குச் செய்யும் துரோகம் என்பது கூடவா மறந்துவிடும்?

உடம்பு நடுங்கத் தொடங்கிய பிறகுதான் வென் நீர்க் குழாயையும் சேர்த்துத் திறந்துவிட மறந்து குளிர் நீரில் நிற்பது புரிந்தது அவளுக்கு.

என்ன முட்டாள்த்தனம்!

ஆனால் தாமஸ் திரும்பி வரும் ஆர்வம் கேட்டதும் அவன் ஏதும் கண்டு கொள்வானோ என்று ஷவர் அறைக் குள் ஓடியதுதான். அவளுக்கு நினைவிருந்தது.

மனது இருந்த நிலையில் எந்தக் குழாயென்று கண்டா திருகினாள்?

இதுவே வெள்ளீர்க் குழாயாக இருந்திருந்தால் உடம்பு பொத்துப் புண்ணாகிப் போயிருக்கும்.

மனம் மட்டும் புண்ணாகிப்போயிருப்பது போதாதா?

ஆனாலும் அவன் தொட்டால் அப்படி மயங்க வேண்டுமா?

தன்னையே நொந்து கொண்டபடி உடைமாற்றிக் கொண்டு கிளம்பினாள் மதுரா.

"நன்றாக நீந்தினாயா, மதுராம்மா?" என்ற கிழவ னின் கேள்விக்கு வேறு புறம் திரும்பியவாறு ஒரு முணு முணுப்பைப் பதிலாகத் தந்து விட்டு விரைந்தாள்.

தன்னுடைய அவசரத்தில் அவன் அவளை விசித்திர முறுவலுடன் பார்ப்பதை அவள் கவனிக்கவே இல்லை.

அன்றிரவு வெகு நேரம் மதுராவால் உறங்க முடியவில்லை.

எலும்பை ஊடுருவிச் சென்ற குளிர் ஒரு பக்கம் வாட் டியது என்றால் சத்யன் தொட்ட இடமெல்லாம் தீயாய் தகித்தது.

அவளது மறுப்பை அலட்சியம் செய்து அவன் அணைத்த விதமும் பேசிய பேச்சும் அவளை வெகுவாக வதைத்தன.

எவ்வளவோ முயன்றும் மனம் வேறிடம் செல்ல மறுத்தன.

வலிக்க வலிக்கப் புலி தன் காயங்களை நக்கிக் கொடுப்பது போல நோக நோக மனது நடந்ததையே உருப்போட்டது.

'நல்ல பாம்பு போல அழகு' என்றானே.

'விஷக் கவர்ச்சி' என்றானே.

ஒவ்வொன்றாக நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தவளுக்கு அவன் பேச்சில் இன்னொன்றும் மனதை உறுத்தியது.

அவளை அவன் பெயர் சொல்லி அழைக்கவே இல்லை.

'மது, மது' என்று ஒரு வாக்கியத்துக்கு மூன்று 'மது' போட்டவன்; சீண்டிச் சினமூட்டினால் 'மதுராட்சி' என்று முழுப் பெயர் சொல்லி அதட்டியவன்; 'என் தேவதை' என்று கொஞ்சியவன். இன்று 'மதுரா' என்று மற்றவர் போல அழைப்பதைக் கூடத் தவிர்த்திருந்தான்.

அவ்வளவு வெறுப்பா?

ஆனால் வெறுக்காமல் என்ன செய்வான்?

கஷ்டம் என்ற ஒரு சொல்லில் கை கழுவி விட்டு ஓடிய ஒருத்தியை அவன் வெறுக்காமல் எப்படி இருக்கமுடியும்?

மீண்டும் கண்ணீர் பொங்கித் தலையணையை நனைத்தது.

நாலு ஆண்டுகள் அருவியாய்க் கொட்டி முடித்த பிறகு இன்னமும் பெருக்குவதற்கு மிச்சம் இருக்கிறதே இந்தக் கண்ணீர்!

இது வரையிலும், இனி அவனைக் காணமுடியாதே; பேசி உறவாட முடியாதே என்ற வேதனையில் கண்ணீர் விட்டாள்.

இப்போது அவன் பேசி உறவாடியே கண்ணீர்விட வைக்கிறான்.

எப்படி ஆயினும் நாலு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய இந்தக் கண்ணீருக்கு முடிவு மட்டும் இல்லை.

கூடவே அவளுக்கு விடிவும் இல்லை.

என்னதான் கூட்டிக் குறைத்தாலும் முதலும் முடிவுமாக விஷயம் இவ்வளவுதான்.

குளிரிலும் பசியிலும் கண்ணீரிலுமாக உடல் சோர்ந்து போய்விட, விசித்தபடியே உறங்கிப் போனாள் மதுரா.

இரவு நேரத்தில், பங்களூர்க் குளிரில் பச்சைத் தண்ணீரில் அதிக நேரம் குளித்தது; சாப்பிடாதது? அதெது என்று எல்லாமாகச் சேர்ந்து எலும்பு வரை நடுங்கியது அவளுக்கு.

தன் சாதாரணக் கம்பளியை இழுத்துப் போர்த்தியும் நடுக்கம் நிற்பதாக இல்லை.

கடைசியாகச் 'செங்கால் நாராய், பாட்டுப் புலவன் போன்று 'கையது கொண்டு மெய்யது போர்த்திக் காலது கொண்டு மேலது தழீஇ'ச் சுருட்டிக் கொண்டு கிடந்தாள்.

இந்நிலையில்தான் சத்யன் மீண்டும் அவளைக் கண்டான்.

இரவு அரவம் அடங்கிச் சற்று நேரம் சென்ற பிறகு ஒட்டலில் அங்கங்கே சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்புவது அவனுக்கு வழக்கமே.

ஆனால் இன்று வழமையான நேரத்தில் அவனால் கிளம்ப முடியவில்லை.

முடியவில்லை என்ன, சுற்று செல்லும் எண்ணமே வரவில்லையே.

மதுராவும் அவளது அழகிய உடலும், கடைசியில் அவளது நெகிழ்வுமே மனதை அடைத்துக்கொண்டு இருந்தன.

பூசைக் கரடிபோல இந்தத் தாமஸ் அப்போது வந்து சேரவேண்டுமா என்று சபித்தான்.

ஆனால் உடனேயே தன்னிடமே வெறுப்பும்மூண்டது.

முன்பு அவள் எப்படி நடந்து கொண்டிருந்தாலும் இன்றைய நிலையில் அவளிடம் அவன் நடந்துகொண்ட முறை எப்படிச் சரியாகும்?

கட்டிப் போட்டுவிட்டு அடிப்பது போலக் கோழைத் தனமான செயல்தானே.

தன்னிடமே 'சீ'யென்று இருந்தது.

ஆனால் அவளால் மட்டுமே தட்டி எழுப்ப முடிந்த— தட்டி எழுப்பப்பட்டிருந்த உணர்வுகளும் உள்ளே பேயாட்டம் ஆடின.

அறைக்குள்ளே மூச்சடைப்பதுபோல உணர்ந்து எழுந்தபோதுதான் அவனுக்கு நேரம் நினைவு வந்தது.

முகத்தைக் கழுவித் துடைத்தவன் ஒரு பெருமூச்சுடன் தன் வழக்கமான வேலையைத் தொடங்கினான்.

வழக்கம் போலவே கால்கள் கடைசியாக மதுராவின் அறைச் சன்னல் அருகே கொண்டு நிறுத்தின.

வயிற்றுக் குழந்தைபோல அவள் குறுகிப் படுத்திருந்த கோலம் மனதை உறுத்திற்று.

அவசரமாகத் தன் அறைக்குத் திரும்பியவன் கட்டிலில் கிடந்த உயர்ந்த கம்பளிப் போர்வையை சுருட்டியெடுத்துக் கொண்டான்.

சுவரோடு ஒட்டியிருந்த அலமாரிக் கதவை விலக்கி, உள்ளே இருந்த 'மாஸ்டர் கீ' கொத்தை எடுத்தான்.

மதுராவின் அறைச் சாவியைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு மறுபடியும் வேகமாக அவள் அறையை நாடிச் சென்றான்.

அபிதாவுக்கும் அன்று உறக்கம் பிடிக்கவில்லை.

மெல்ல மெல்லத் தன் பிடி இருகுகிறது என்று அவள் மகிழத் தொடங்கியிருந்த சமயத்தில் வந்து சேர்ந்த அந்த மதுராவையோ அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அத்தோடு மதுராவின் விஷயம் அவளுக்குச் சரியாகப் புரிபடவும் இல்லை.

மதுராவின் 'சர்ட்டிபிகேட்'டுகளைப் பார்க்கையில் அவள் இந்த வேலைக்கு ஏன் வரவேண்டும்?

சத்யனுக்கும் அவளுக்கும் இடையே ஏதோ நடந்திருக்க வேண்டும் என்பது உறுதி.

அது என்ன என்பது தெரியாத போதும் இப்போதைக்கு இருவருக்கும் இடையில் ஒன்றும் சரியில்லை என்பது மட்டும் நன்றாகப் புரிந்தது.

அது சரிப்பட்டு விடக்கூடாது என்பது அவளது குறிக்கோளாகவும் இருந்தது.

மதுராவிடம் குற்றம் காணக் கழுகாய்க் காத்திருந்தாள்.

முயன்றும் வேலையில் பழுது சொல்ல முடியவில்லை.

ஆனால் மதுராவின் இரவு நீச்சல்?

அவள் நீச்சல் குளத்தைப் பயன்படுத்துவதை அறிந்ததும் சத்யனிடம் வத்தி வைத்தாள்.

பணத்தைக் கொட்டிக் கொடுத்துத் தங்குகிறவர்களின் வசதிக்காக லட்சக் கணக்கில் செலவு செய்து அமைத்தது; இதைத் துடைத்துத் துப்புரவு செய்யும் வேலைக்காரி பயன்படுத்துவதா? இப்படியே எல்லோரும் தொடங்கினால் என்ன ஆகும்?

''தாமஸிடம் சொல்லு.'' என்றான் சத்யன் அசுவாரசியமாக.

கிழவனிடம் தன் அதிகாரம் செல்லாது என்பது அபிதாவுக்குத் தெரியும்.

பல்லாண்டு காலமாகக் குடும்பத்தோடு ஒட்டிப் பழகியவன் என்பதால் அவனுக்குச் சில சலுகைகள் இருந்தன.

அவனை யாரும் அதட்டுவது சத்யனுக்கும் பிடிக்காது.

அவன் யாருக்கும் பயப்படுவதும் இல்லை.

எனவே, ''அந்தப் பெண் தேர்ந்த ஜாலக்காரியாகத் தெரிகிறது, சத்யன். அழுது மாய்மாலம் செய்து அவனிடம் அனுமதி வாங்கி விட்டாள் போலத் தெரிகிறது. அவனுக்கும் ரொம்பவும் வயதாகிவிட்டதால் ஒன்றும் தெரிவது இல்லை.'' என்றாள் வருத்தம் காட்டி.

''சரி சரி. நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்று முடித்துவிட்டான் அவன்.

மாலை ஒளி மறைந்து இரவு படர்ந்த வேளையில் சத்யன் நீச்சல் குளம் பக்கம் செல்வதை முதலில் திருப்தியுடன் நோட்டமிட்டாள்.

உடனேயே உள்ளூர ஒரு சின்ன நெருடல்.

மதுரா குளிக்கும் நேரம் பற்றி இவள் சத்யனிடம் எதுவும் சொல்லவில்லையே!

பின்னே சரியான நேரத்தை எப்படிக் கண்டு சென்றான்.

சற்று நேரத்தில் திரும்பி வந்த அவன் முகம் கல்லாக இருந்தது.

வழக்கமான இரவுச் சுற்று செல்லவும் அவன் வரவில்லை.

இருந்திருந்து இன்று வழக்கத்தை அவன் கைவிடக் காரணம் என்ன?

நீச்சல் குளத்தில் நடந்த எதுவும் இதற்குக் காரணமாக இருக்குமா?

அப்படி என்ன நடந்திருக்கும்?

அபீதா யோசித்துக் கொண்டு இருந்தபோதே லிஃப்ட்டிலிருந்து சத்யன் வெளிப்பட்டான்.

கீழ்த்தளத்தில் வரவேற்பிற்குப் பின்புறமாய் முதல் அறை அபீதாவுடையது.

எனவே ஒரளவுக்கு சத்யனுடைய போக்குவரத்துகளைக் கண்காணிப்பது அவளுக்கு எளிதாகவே இருந்தது.

இம் மாதிரி இரவு ரோந்துகளை முடித்துக் கொண்டு அவன் மெல்லத் திரும்பும் போது அவளை இடைமறித்து,

நைட்டியில் தன் அழகை அவ்வப்போது அவள் காட்டுவது உண்டு.

இதே நோக்கத்தில் அவன் திரும்பி வருவதற்காக அன்றும் காத்திருந்தவள் அவன் வெகு வேகமாகச் சென்று லிஃப்டில் புகுவதைக் கண்டாள்.

இனி அழைத்துப் பேசினால் தற்செயலாய் நடந்த சந்திப்பு போல இராது...

அவள் யோசிக்குமுன் லிஃப்ட் மூடிக் கொண்டது.

சை!

இவ்வளவு நேரம் கண்ணாடி முன் நின்று தலையை அழகாக கலைத்து விட்டுக் கொண்டது; 'நைட்டி'யை முன் கீழே இழுத்து விட்டுக் கொண்டது எல்லாம் வீண்!

எரிச்சல் பட்டுக் கொண்டே தன் அறைக் கதவை மூடுகையில் லிஃப்ட் கதவு மீண்டும் திறப்பது தெரிந்தது.

சத்யனே தான்!

என்ன வேகம்!

கையில் என்ன?

இந்த வேகத்தில் அவன் எங்கே செல்கிறான்?

அவன் அறியாமல் அவனைப் பின் தொடர்ந்தாள்.

ஒடுசாவியைக் கொண்டு அவன் மதுராவின் அறையைத் திறந்து உள்ளே செல்வதைக் காணவும் அவளுக்கு மூச்சே நின்று விட்டது.

விஷயம் இவ்வளவுக்கா முற்றிவிட்டது!

ஆத்திரமும் ஏமாற்றமுமாய்க் கொதித்துப் போனாள் அபீதா.